…oved by the Text-Book Committee—Vide Fort St. George Gazette dated 23rd May 1950 Part I Page 34, Part II Page 115.

நாட்டுத் தலைவர் நால்வர்

வித்துவான் சு. நாகராசன், B.O.L., B.T.,

…ஸ்
…டிங்ஸ்)
ஓரியண்டல் பப்ளிஷிங் ஹ…
286, எஸ்பிளனேட் :: [விலை அணு 11

நாட்டுத் தலைவர் நால்வர்

ஆசிரியர் :
வித்துவான் சு. நாகராசன், B. O. L., B. T.,
தமிழாசிரியர்
செயின்டு மேரி பெண்டிர் போதனாமுறை உயர்நிலைப்பள்ளி,
சேலம்.

திருத்திய பதிப்பு

ஓரியண்டல் பப்ளிஷிங் ஹவுஸ்
286, எஸ்பிளனேட், (அப்பா பில்டிங்ஸ்)
சென்னை

காபிரைட்] 1950 [விலை அணா 11

உள்ளுறை



பண்டித மோதிலால் நேரு

நாட்டுத் தலைவர் நால்வர்

1. பண்டித மோதிலால் நேரு

1. தோற்றமும் தொழிலும்

உலகம் இன்று பலவிதங்களில் உயர்ந்து விளங்குகிறது. உலகில் உயர்ந்தவர்கள் பலர் உள்ளனர். சிலர் கல்வியில் சிறந்துள்ளனர்; சிலர் பேரறிவு பெற்றுள்ளனர்; சிலர் இடைவிடாது முயல்கின்றனர்; சிலர் தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்கின்றனர். பிறர் பொருட்டாகவே அல்லும் பகலும் பாடுபடுகின்ற சிலர் உலகில் இருக்கின்ற காரணத்தினாலேயே உலகம் பல துறைகளில் உயர்ந்துள்ளது. அத்தகையோர் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் பொருட்படுத்தவில்லை; பதிலுதவியை எதிர்பார்க்கவில்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அவர்கள் பெயரையும், புகழையும் விரும்பவில்லை; பட்டமும் பதவியும் பெறலாம் என்று நினைக்கவில்லை. 'மக்களுக்குத் தொண்டு செய்யவே நாம் உலகில் பிறந்தோம்' என்பதே அவர்கள் நினைவு. அப்படிப்பட்டவர்களை நாம் எக்காலத்திலும் மறக்க முடியாது.

"பிறர் செய்வதற்கு அரியவற்றைச் செய்பவர்களே பெரியவர்; அவற்றைச் செய்ய முடியாதவர்கள் சிறியர்" என்பது திருவள்ளுவர் கருத்து. செய்வதற்கு அரியன யாவை? செல்வத்தைச் சேர்ப்பது

அரிது. சேர்த்த செல்வத்தைத் துரும்பென நினைப்பது அதனினும் அரியது. பிறர் பொருட்டு உழைப்பது எளிதன்று. பிறர் பொருட்டுத் தம் உடலையும், உயிரையும், பொருளையும் இழப்பது மிக அருமை. இத்தகைய அருஞ்செயல்களை எளிதாகச் செய்த பெரியோர்கள் நம் நாட்டில் பலர் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். இவர்களுள் பெருஞ் சிறப்பு வாய்ந்த நால்வருடைய வாழ்க்கை வரலாறு களை நாம் இந்நூலில் விளங்க அறிவோம். அவர் களுடைய சிறந்த வாழ்க்கை நமக்குப் பெரும் பயனைக் கொடுக்கும்; நன்னெறி காட்டும்; நல் வழிக்கண் செலுத்தும்; நீதி நெறியில் நாம் என்றும் நடக்குமாறு செய்யும்; அறிவைப் பெருக்கும்; அன்பைப் பரப்பும்; அருளை அளிக்கும்; உணர்ச் சியை ஊட்டும்; ஊக்கத்தை உண்டாக்கும்; உறங்கு பவரைத் தட்டி எழுப்பும்.

பண்டித மோதிலால் நேரு பாரதத் தாயின் பெருந் தவப் புதல்வராவர். அவர் இம் மண்ணுலகில் 1861-ஆம் ஆண்டு மே மாதத்தின் ஆறுவது நாளில் தோன்றினர். வங்கக் கவியரசராகிய தாகூர் பெரு மான் தோன்றிய நாளும் அதுவேயாகும். மோதிலால் தமது தந்தையைக் காணும் பேறு பெறவில்லை. பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே அவரது தந்தையார் இறைவன் திருவடி நீழலை அடைந்தார். எனவே மோதிலால் நேருவை அவரு டைய தமையனாராகிய நந்தலால் நேருவே தந்தை நிலையில் இருந்து போற்றி வளர்த்தார். நந்தலால் நேரு ஆக்ராவில் வழக்கறிஞராக இருந்தார். அவர் தமது உடன் பிறந்த மோதிலாலை, அன்புடனும் ஆதர

வுடனும் நடத்தி, கல்வி கேள்விகளில் சிறந்தவராகச் செய்தார்.

'நேரு' என்பது மோதிலாலின் குடும்பத்திற்குக் கிடைத்த சிறப்புப் பெயராகும். அவரது முன்னோர்கள் முதலில் காஷ்மீரத்தில் வாழ்ந்தனர். அவர்கள் 'பண்டிதர்' என்ற குலப்பெயரால் அழைக்கப்பட்டு வந்தனர். அவர்களுள் ஒருவராகிய ராஜ்கால் என்பவர் டில்லிக்கு வந்து சேர்ந்து செல்வமும் புகழும் ஈட்ட முயன்றார்; டில்லிப் பேரரசரின் ஆதரவை அடைந்தார்; கால்வாயொன்றின் கரையில் ஒரு வீட்டையும் மானியமாகப் பெற்றார். அவ்விடத்தை 'நகரா' என்று அழைத்தனர். 'நகரா' என்ற சொல் திரிந்து நேரு என்று ஆயிற்று. அப்பெயரே நாளடைவில் அக்குடும்பத்தின் பெயராகவும் அமைந்தது. சிப்பாய்க் கலகம் நிகழ்ந்த காலத்தில் அக்குடும்பத்தினர் டில்லியை விடுத்து ஆக்ரா வந்தனர். அங்குதான் மோதிலால் பிறந்தார். ஆக்ராவில் இருந்த உயர் நீதி மன்றம் ஆக்ராவிலிருந்து அலஹாபாத்திற்கு மாற்றப்பட்டது. அப்பொழுது மோதிலால் முதலியவர்களும் அலஹாபாத்திற்கு வந்துவிட்டனர். அது முதற்கொண்டு அந்நகரமே நேருவின் குடும்பத்தினருடைய இருப்பிடமாக அமைந்தது.

மோதிலால் பள்ளிக்கூடப் படிப்பில் அதிக ஆர்வம் காட்டவில்லை. வாதம் செய்வதே அவரது இயல்பு. யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே கேட்டுக்கொண்டு வாய் பேசாமல் இருந்துவிடமாட்டார். பிறர் சொன்னவற்றை ஆராய்ந்து பார்த்து, தமது மனத்திற்கு எது சரியென்று

தோன்றியதோ அதைச் சொல்லிவிடுவார். அவருடைய மனம் இளமை முதற்கொண்டு சட்ட அறிவிலேயே சென்றது; வழக்கறிஞர்களின் சோதனையில் அவர் பரிசும் பெற்றார். அதுமுதல் அவருடைய அறிவு நுட்பம் உலகுக்கு நன்கு வெளிப்பட்டது.

மாணிக்கத்தை நன்றாகச் சாணை பிடித்துக் கழுவினால்தான் அதனது ஒளி நன்றாக வீசும். சாணை பிடிக்கும் முறைக்கு ஏற்பத்தான் அதனது ஒளி அமையும். அதுபோல ஒரு குழந்தையினுடைய மனத்தை அறிந்து அதனது விருப்பத்திற்கு ஏற்ற வழியில் செலுத்தினால்தான் அக்குழந்தை பிற்காலத்தில் பெயரும் புகழும் அடையும். மோதிலாலின் தமையனாரைப் பெரிய அறிஞர் என்று சொல்ல வேண்டும். அவர் மோதிலாலினது இளமைப் பருவத்திலேயே அவரது மனப்பான்மையை நன்கு அறிந்தார். யாராக இருந்தாலும் அஞ்சாது செம்மையாகவும், நேர்மையாகவும், ஆணி அடித்தது போலவும் பேசும் திறமை மோதிலாலிடம் காணப்பட்டது. எனவே நந்தலால் அவரை வழக்கறிஞர் துறையில் இறங்கப் பழக்கினார். அதற்கேற்ப மோதிலாலும் பேச்சு வன்மையும், வாதம் செய்யும் திறமையும் பெற்ற வழக்கறிஞராகப் பிற்காலத்தில் திகழ்ந்தார்.

நந்தலால் நெடுங்காலம் உயிர் வாழவில்லை. ஆகவே மோதிலால் வழக்கறிஞர் தொழில் தொடங்கிய சில ஆண்டுகளுக்குள் அவருக்குப் பல பொறுப்புக்கள் வந்துவிட்டன. குடும்பச் சுமை பெரியதாகவே இருந்தது. எனினும் மோதிலால் அச்சுமையைப் பொறுமையோடு தாங்கினார். “துன்ப

முற்றவர்களே இன்பம் அடைவார்கள்" என்னும் பழமொழியை அவர் நன்கு அறிந்தவர். தமது கடமையைப் பெருமையுடன் செய்ய அவர் தயங்க வில்லை. குடும்பத்தை நடத்தப் பெரும் பொருள் வேண்டியிருந்தது. ஆதலால் மோதிலால் நாள் முழுவதும் இடை விடாது வேலை செய்து வந்தார். உழைத்ததற்குப் பயன் கைமேல் கிடைத்தது. அவர் தமது உழைப்பின் பயனாலேயே பிற்காலத் தில் பெருஞ் செல்வத்தைச் சேர்த்தார்.

மோதிலால் வழக்கறிஞராக வாழ்க்கை தொடங்கியபொழுது அடைந்த துன்பங்களுக்கு அளவில்லை. ஆனால் அவர் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவர் எப்பொழுதும் தம் காரியத்திலேயே கண்ணாயிருந்தார். ஒரு காரியத்தி லேயே கண்ணாயிருப்பவர் உடல் வருத்தத்தையும் பசியையும் பொருட்படுத்துவார்களோ? தூங்கு வார்களோ? மோதிலால் தம்மிடம் வந்த வழக்கு களிலேயே மனத்தைச் செலுத்தினார். அவரது பொறுப்புக்கள் உயர உயர, அவர் செய்ய வேண்டிய வேலையும் அதிகரித்தது. ஆயின் அவர் சிறிதும் மனம் சலிக்கவில்லை. தம்மிடம் வந்த வழக்குகளை அவர் நன்கு கேட்பார்; ஆழ்ந்து ஆராய்வார்; நீதி மன்றத்தில் தெளிவாக எடுத்துரைப்பார். அவரது பேச்சுத் திறமையைக் கண்ட எதிரிகளின் வழக்கறிஞர்கள் வாய் திறக்கவும் அஞ்சுவர். எனவே மோதிலால் தமது சொல்வன்மையினாலேயே பெரும் பொருள் சேர்த்து விட்டார்; வழக்கறிஞர்களில் சிறந்தவர் எனப் புகழப்பட்டார். வழக்குகள் அவ ரிடமே வந்த வண்ணமாக இருந்தன. இந்தியா

வில் வழக்கறிஞர் தொழில் செய்து பேரும், புக ழும், செல்வமும் அடைந்தவர்களுள் மோதிலால் நேருவைச் சிறந்தவராகக் குறிப்பிடலாம்.

2. ஆனந்த பவனம்

மோதிலால் நேரு தமது வழக்கறிஞர் தொழி லில் பெரும் பொருள் ஈட்டினர். அவரது குடும்பம் செல்வ நிலையில் உயர்ந்து விளங்கியது. அவர் தமது ஒரே புதல்வராகிய ஜவஹர்லால் நேருவை இளமையிலேயே கல்வியின் பொருட்டு இங்கிலாந் திற்கு அனுப்பியிருந்தார். அக்காலத்தில் ஒருவர் தமது மகனை இங்கிலாந்தில் சென்று கல்வி பயிலு மாறு செய்தார் என்றால் அவர் மிகச் செல்வம் வாய்ந்தவராக எல்லோராலும் கருதப்படுவார். அதற்கேற்பவே மோதிலாலும் பெருஞ் செல்வராக விளங்கினர். எனவே அவர் தமது மக்களும், உற வினரும் நன்கு வாழ்வதற்கு ஒரு பெரிய இடத்தை விலைக்கு வாங்க விரும்பினர். அது காரணமாகத் தான் அவர் ஆனந்த பவனத்தை வாங்கினர். ஆனந்த பவனத்தை விலைக்கு வாங்கிய பொழுது ஜவஹர் லால் பத்து வயது நிரம்பிய சிறுவராக இருந்தார்.

ஆனந்த பவனம் அமைந்திருந்த இடம் மிகப் பரிசுத்தம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. இராமன் இலங்கை சென்று இராவணனைக் கொன்று சீதையை மீட்டிய பொழுது அவனுக்கு விதிக்கப்பட் டிருந்த பதினான்கு ஆண்டு காட்டு வாழ்க்கை முடிந்து விட்டது. எனவே இராமன் அயோத்தி திரும்பினன். இராமனைக் காணும் வரையில் தவ நிலையில் நின்றிருந்தான் பரதன். இராமன் வருவ

னைக் கேள்வியுற்ற பரதன் தன் தமையனை எதிர் கொண்டழைக்கத் தன் தாய்மார்களுடன் சென்றான். அது காலையில் இராமனும், பரதனும் ஒன்று கூடி மகிழ்ந்து அளவளாவிய இடமே ஆனந்த பவனம் அமைந்திருந்த இடம் என்று யாவரும் கருதினர். ஆகவே அம்மாளிகை நின்ற இடத்தைப் பார்ப்பதே புண்ணியம் என்று பலர் நம்பினர். ஆனந்த பவனத்தின் அருகிலேயே பரத்துவாஜ ஆசிரமமும் அமைந்திருந்ததாம்.

பிரயாகை என்ற இடத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு பெரிய திருவிழா நடைபெறுவது வழக்கம். அதற்குக் கும்பமேளா என்று பெயர். இப்பொழுதும் அவ்வழக்கம் இருந்து வருகிறது. அத்திருவிழாவிற்கு நூறாயிரக் கணக்கான மக்கள் வருவது இயல்பு. அம் மக்கள் அப்பொழுது பிரயாகையில் உள்ள புண்ணிய நீரில் முழுகுவர். அவ்வாறு கும்பமேளா என்னும் திருவிழாவிற்குச் செல்லும் மக்களில் பெரும்பாலோர் ஆனந்த பவனத்தில் தங்குவார்கள். அவ்வாறு வந்தவர்கள் அம்மாளிகையில் தடையின்றி எங்கும் செல்வார்கள். சில சமயங்களில் அவர்கள் அவ்விடத்தில் கொண்டாடும் உரிமைகள் கணக்கில் அடங்கா. அவர்களில் பெரும்பான்மையோர் ஆனந்த பவனத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மிகுதியினாலேயே வந்தவர்களாவர். அறிவும் ஒழுக்கமும் நிறைந்த மோதிலால் நேருவையும், அவரது அருமந்த மைந்தராகிய ஜவஹரையும் பார்க்கும் பொருட்டே பலர் பெரும்பாலும் வந்தனர் என்று கூறுவது பொருந்தும்.

'ஆனந்த பவனம்' என்ற பெயர் காரணப் பெயர் போலும்! அங்குச் சென்றவர்கள் ஆனந்தத்தையே அடைவர். அந்த மாளிகையில் அகன்ற தாழ்வாரங்களும், பெரிய அறைகளும் உள்ளன. மாளிகையைச் சுற்றி ஒரு பெரிய பூங்கா உண்டு. அங்குப் பூத்த பன்னிறப் பூக்கள் கண்டோர் கண்களைக் கவரும். அக்காட்சியைக் கண்டு களிப்படையாதவர் இரார். அம் மாளிகையின் ஒருபுறத்தே அகன்ற புல்வெளி அமைந்துள்ளது. அது பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற காட்சி கொடுக்கும். மாளிகையின் பின்புறத்தில் பழத் தோட்டம் உள்ளது. முன் புறத்திலோ மற்றொரு அழகிய புல்வெளி உண்டு. அதன் பக்கத்தில் பந்து விளையாடும் இடமும் அமைந்திருந்தது.

ஆனந்த பவனத்தின் உட்புறம் அகன்ற இடத்தைத் தன்னிடத்தே கொண்டு விளங்கியது. அதனைக் கண்டோர் அவ்விடம் நாகரிகத்திற் சிறந்த ஓர் செல்வரின் இருப்பிடம் என்பதை எளிதில் கண்டு கொள்வர். தரை வழ வழ என்றிருக்கும். தரையில் கம்பளங்களும் விரிக்கப்பட்டிருக்கும். சுவர்களில் பல வகையான படங்கள் அவ்விடத்திற்கு அழகு கொடுத்துக் கொண்டு தொங்கும்.

அம் மாளிகையின் முன் புறத்தில் ஒரு தனி விடுதி இருந்தது. அதனை 'கோடை விடுதி' என்று அழைத்தனர். அதற்குள் சிவபிரானின் உருவம் ஒன்று நடுவில் வைக்கப்பட்டிருந்தது. அவ்வுருவம் ஒரு உயர்ந்த மேடையின் மேல் அழகுடன் நின்றது. அம் மேடையின் அமைப்பு ஒரு சிறு மலையைப் போல் தோன்றும். சிவபிரானின் முடியில் கங்கை

உள்ளதன்றே? அதற்குப் பொருத்தமாக அதன் முடியிலுள்ள வாயிலிருந்து நீர் வெளிப்பட்டுச் சுற்றிலும் பொழியும். அம் மேடையின் கீழே ஒரு சிறு குளம் போல் நீர் தேங்கி இருக்கும். அதைச் சுற்றிலும் அழகிய மலர்கள் செடிகளில் பூத்திருக்கும். அவ்விடம் பிறகு அழிக்கப்பட்டுவிட்டது.

மோதிலால் பெருஞ் செல்வர் என்பதைக் குறிப்பிட்டோம். எனவே அவரது மாளிகையில் எண்ணிறந்த பணியாட்கள் இருந்தனர். அவர்களில் பலர் மேனாட்டுத் துரைகளின் வேலைக்காரர்கள் போல் உடைகளை உடுத்தி யிருப்பர். இவ்வாறு பணியாட்கள் பலருடன் விளங்கிய ஆனந்த பவனம் ஒரு சிறு அழகிய நகரம் போலவே காட்சி அளித்தது. ஆனந்த பவனத்தை அடுத்திருந்த இடங்களில் மோதிலால் நேருவின் நெருங்கிய உறவினரும், நண்பர்களும் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு பலவாற்றானும் சிறந்து விளங்கிய ஆனந்த பவனத்தில் எப்பொழுதும் அமைதி நிலவியிருக்கவில்லை. பிற்காலத்தில் மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும், நாட்டிற்குத் தொண்டு புரிய முற்பட்டுச் சிறை புக்க பொழுது அம்மாளிகையில் பெரிய பரபரப்பு உண்டாயிற்று. இத்தகைய பரபரப்புக்களும் அமைதியும் மாறிமாறி நிகழ்வது பிறகு இயல்பாகப் போயிற்று. மோதிலால் பிறகு வேறொரு புதிய மாளிகையைக் கட்டி அதற்கும் 'ஆனந்த பவனம்' என்ற பெயரையே வைத்தார். அவர் பிறகு தமது பழைய ஆனந்த பவனத்தை இந்திய தேசத்திற்கே நன்கொடையாக அளித்து விட்டார். அதன்பின் அம்மாளிகை 'சுவராஜ்

பவனம்' என்ற பெயரைப் பெற்றது. இப்பொழுது அதன் ஒரு பகுதி காங்கிரஸின் மருத்துவச் சாலையாக உள்ளது. மற்றொரு பகுதி அகில இந்திய காங்கிரஸ் நிலையத்தினர் அலுவல பார்க்கும் இடமாக உள்ளது.

ஆனந்த பவனத்தின் அழகிய அமைப்பை ஒருவாறு நீங்கள் உணர்ந்தீர்கள். அதனது உருவம் உங்களுடைய மனக்கண்ணில் புலப்படும் என்பது திண்ணம். அத்தகைய சிறந்த பரிசுத்தமான இடத்தை நாட்டிற்கே நன்கொடையாக அளித்த மோதிலால் நேருவின் பெருந்தன்மையை நாம் இத்தகையதென்று கூற முடியுமோ? அவர் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் நாட்டின் பொருட்டுத் தியாகம் செய்தார் என்று சொல்லும் பொழுது பொருளை அளித்ததற்கு இதைக் காட்டிலும் வேறு சான்றும் வேண்டுமோ? ஆனந்த பவனம் மட்டும் என்ன? அவர் தமக்குரிய பொருள் எல்லாவற்றையும் நாட்டின் விடுதலைக்காகத் தியாகம் செய்யக் காத்திருந்தார். எனவே அவர் ஆனந்த பவனத்தை நன்கொடையாக அளித்ததில் வியப்பு இல்லை.

3. நாட்டுத் தொண்டு

மோதிலால் நேரு செல்வத்திற் சிறந்த சீமானாக விளங்கினார். அவருக்குச் செல்வம் வளர்ந்து கொண்டே இருந்தது. 1912-ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தம் கல்வியை முடித்துக்கொண்டு இங்கிலாந்திலிருந்து திரும்பினார். அவரது வருகையால் ஆனந்த பவனமே ஒரு தனி அழகு பெற்றது. மோதிலால் தமது ஒரே மைந்தராகிய ஜவஹர்லாலி

விடம் வைத்திருந்த அன்பு இத்தகையது என்று சொல்லமுடியாது. மைந்தரது பேரறிவைக் கண்டு மனமகிழ்ந்தார் மோதிலால். தமது மைந்தரின் அறிவு நுட்பத்தையும், சொல் வன்மையையும், நல்லொழுக்கங்களையும் கண்டு கண்டு அவர் எல்லையற்ற இன்பம் அடைந்தார். செல்வமும், கல்வியும் ஓரிடத்தில் சேர்ந்திராது என்று கூறுவது இயற்கை. ஆனால் நேருவின் குடும்பமோ அதற்கு எதிராக இருந்தது. தந்தையும், மைந்தரும் கல்விச் செல்வத்தையும், அறிவுச் செல்வத்தையும் மிகுதியாகப் பெற்றிருந்தநுடன் பொருட்செல்வமும் அளவின்றி அடைந்திருந்தனர். இது வியப்பன்றோ!

1920–ஆம் ஆண்டு நேருவின் குடும்பத்தில் ஒரு பெரு மாறுதல் ஏற்பட்டது. அதற்கு முதற் காரணமாக இருந்தவர் மகாத்மா காந்தியடிகளேயாவார். அவர் அந்த ஆண்டில் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கினார். அந்த இயக்கம் தோன்றிய காரணங்களை நாம் விவரிக்க வேண்டுவதில்லை. இந்திய மக்களில் பலர் அந்நியர் ஆட்சியில் மிக வெறுப்புக் கொண்டனர்; சுதந்திரம் பெற விரும்பினர்; தம் தேசத்தைத் தாமே தம் விருப்பப்படி ஆளக் கருதினர். இவற்றால் பல இடங்களில் குழப்பங்களும், கலகங்களும் நடந்தன. அரசாங்கத்தார் அவற்றைக் கொடுமையான முறையில் அடக்க முயன்றனர். அரசாங்கத்திற்கு விரோதமாக இருந்தவர்கள் சொல்லமுடியாத துன்பங்களுக்கு ஆளாயினர். இவற்றின் பயனாகத்தான் மகாத்மா காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார்.

மோதிலால் நேரு மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றியவராயினும் அவரது மனம் இந்தியர்களிடமே இருந்தது. ஆங்கிலப் பழக்க வழக்கங்கள் பலவற்றை அவர் கைக்கொண்டிருந்தது உண்மையே. என்றாலும் நாட்டிற்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்பதே அவரது பெரு விருப்பமாகும். அவர் ஆரம்பத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தில் சேரவும், மகாத்மா காந்தியடிகளுடன் ஒத்துழைக்கவும் இணங்கவில்லை. ஆனால் ஜவஹர்லால் நேருவோ காந்தியடிகளையே பின்பற்ற விரும்பினார்; அவர் எவ்வழி காட்டினாலும் அவ்வழியே நடக்க விரும்பினார். இது காரணமாகத் தந்தைக்கும் மைந்தருக்கும் வாதங்கள் நிகழ்ந்தன.

சத்தியாக்கிரக இயக்கம் கட்டுப்பாடான முறையில் நடத்தப்பட்டது. அயல் நாட்டுப் பொருள்களையும் ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களையும் வெறுத்து விலக்குவதே அந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். மோதிலால் நேருவும் இந் நோக்கத்தை ஆதரித்தார். ஆனால் இந்த இயக்கத்தில் சேர்ந்து சிறையில் புகுவதால் ஒரு பயனும் இல்லை என்பதே அவரது எண்ணம். இது பற்றித் தந்தைக்கும், மைந்தருக்கும் பல நாட்கள் வாதங்கள் நடந்து வந்தன. மைந்தர் எடுத்துக் காட்டிய சிறந்த சில காரணங்களைத் தந்தையால் ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. இருந்தாலும் செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்து, துன்பமென்பதையே இன்னதென்று அறியாத மைந்தர் சிறையில் எவ்வாறு இருப்பார் என்ற எண்ணமே தந்தையை வாட்டியது. ஆயின்

ஜாலியன்வாலா, பஞ்சாப் போன்ற இடங்களில் அரசாங்கம் செய்த கொடுமைகளைக் கேள்வியுற்றவுடன் மோதிலாலினது மனம் மாறுபட்டுவிட்டது. தமது மைந்தர் செய்த முடிவு சரியானதே என்று அவர் கண்டார்; நாட்டிற்குச் சுதந்திரம் வரவேண்டுமேயானால் பல துன்பங்களை அடையத்தான் வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தார்.

இவ்வாறு மோதிலால் ஆரம்பத்தில் காந்தியடிகளுடன் ஒத்துழைக்கத் தயங்கினார். மோதிலால் எக்காரியத்தையும் ஆழ்ந்து சிந்திப்பது வழக்கம். "எண்ணித் துணிக கருமம்" என்பதற்கு ஏற்ப அவர் எதையும் நன்றாக ஆராய்ந்து பார்த்துத்தான் துணிவார். ஒருவர் ஒரு காரியத்தில் இறங்குவதற்குமுன் அக்காரியத்தினால் விளையும் நன்மை தீமைகளை நன்கு சிந்திக்க வேண்டும். காரியத்தைத் தொடங்கிய பிறகு 'ஐயோ! ஏன் இக்காரியத்தில் இறங்கினோம்?' என்று வருந்துவதில் பயனில்லை. மோதிலால் இதனை நன்கு அறிந்திருந்தார். அதனால் தான் அவர் முதலில் காந்தியடிகளுடன் ஒத்துழைக்கத் தயங்கினார். வேறு முறையில் நாட்டிற்குச் சுதந்திரத்தை வாங்க வழியுண்டோ என்றுதான் அவர் ஆராய்ந்து பார்த்தார். முடிவில் காந்தியடிகள் பின்பற்றிய வழியே சிறந்தது என்பதைக் கண்டார். அதன் பின்பே அவர் காந்தியடிகளுடன் ஒத்துழைக்க இசைந்தார்.

மோதிலால் தமது நாட்டுத் தொண்டிற்கு முதற்படியாகத் தமது வழக்கறிஞர் தொழிலை விடுத்தார். அஃது எளிய காரியமோ? பெரும் பொருள் வருவாய் நின்றுவிடுமன்றோ? செல்வத்தில் திளைத்த குடும்

பத்திற்கு வருவாய் நின்றுவிட்டால் யாது நிகழும்? எனவே நேருவின் குடும்பத்தில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. ஆடம்பரங்கள் அகன்றன. விருந்து கள் ஒழிந்தன. வேலைக்காரர்களின் தொகை குறைந்து விட்டது. மோதிலால் தம்மிடமிருந்த குதிரைகளையும், வண்டிகளையும் விற்றுவிட்டார். ஆனந்த பவனத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த விலையுயர்ந்த பொருள் கள் பல விற்கப்பட்டன. மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கி ஆடம்பர வாழ்க்கையில் இருந்த மோதிலால் எளிய வாழ்க்கையைப் பின்பற்றினார். அவருடைய வாழ்க்கையில் பல மாறுதல்கள் உண்டாயின; சுகத்தை வெறுத்தார்; துன்பத்தைப் பொருட்படுத்த வில்லை.

தந்தையும், மைந்தரும் ஒன்றுபட்டனர். ஒரு வருடைய மனத்தை மற்றொருவர் நன்கு அறிந்தார். தமது மைந்தருக்கு இளமையில் அவ்வளவு மன வுறுதி வந்ததைக் கண்ட மோதிலால் பெருமிதம் கொண்டார். செல்வச் சிறப்பில் மூழ்கியிருந்த தம் தந்தையார் எல்லா இன்பங்களையும் வெறுத்து நாட் டுத் தொண்டில் ஈடுபட்டதைக் கண்ட ஜவஹர்லால் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. தந்தைக்கு மைந்தரிடம் அன்பு மிகுந்தது. மைந்தருக்குத் தந்தை யிடம் மதிப்பும், பக்தியும் மிகுந்தன.

ஆனந்த பவனத்திற்கு அரசியல் அறிஞர்கள் அடிக்கடி வரத் தொடங்கினர். வாதங்களும், சொற்பொழிவுகளும் இடைவிடாது நிகழ்ந்தன; பல திட்டங்கள் வகுக்கப்பட்டன; பல முடிவுகள் செய்யப்பட்டன. அங்கு வந்தவர்கள் யாவரும் ஆனந்த பவனத்தில் உண்டான மாறுதல்களைச்

கண்டு வியப்புற்றனர். மோதிலாலையும் ஜவஹர்லாலை யும் கொண்டாடாதவர்கள் இலர்.

1921-ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஊழியர்களில் பலர் சிறை செல்ல நேர்ந்தது. அதுபொழுது வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்திருந்தார். அவர் அலஹாபாத்திற்கும் வருவதாகத் திட்டம் போடப் பட்டிருந்தது. அதற்குச் சில நாட்களுக்கு முன்பாக அரசாங்கத்தார் மோதிலாலுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தனர். அக்கடிதத்தில், வேல்ஸ் இள வரசர் அலஹாபாத்தில் தங்கும்பொழுது ஆனந்த பவனத்தின் ஒரு பகுதியைத் தம் உபயோகத்திற்கு விடவேண்டுமென்றும், குறிப்பிட்ட நேரத்தில் அதன் கதவுகளை மூடிவிட வேண்டும் என்றும், இன்னும் சில குறிப்புக்களும் காணப்பட்டன. அக் கடிதத்தைக் கண்ட மோதிலால் நேரு கடுஞ் சினம் கொண்டார். எனினும் அவர் அரசாங்கத்திற்கு ஒரு பதில் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் 'ஆனந்த பவனம் என்னுடைய சொத்து. அதன் மேல் அரசாங்கத்திற்கோ, வேறு மக்களுக்கோ எவ் விதமான உரிமையும் கிடையாது. என் இஷ்டப் படி அதை மூடி வைக்கவும், திறந்து வைக்கவும் எனக்கு உரிமை உண்டு. என் விருப்பப்படி அதில் யாரை வேண்டுமானாலும் இருக்கச் செய்வேன். இதில் அரசாங்கம் தலையிடுவது கூடாது. சட்டத் திற்கும் நீதிக்கும் புறம்பாக நான் நடக்க மாட் டேன். ஆயின் அரசாங்கத்திற்கு நான் ஒரு உறுதி மொழி கொடுக்கிறேன். வேல்ஸ் இளவரசர் அலஹாபாத்தில் தங்கும்பொழுது அவருக்கு யாரா லும் எவ்விதமான தீங்கும் வராதிருப்பதற்கு நான்

பொறுப்பாளியாக இருக்கிறேன். இதை நீங்கள் நன்றாக நம்புங்கள். இதில் யான் நிலையளவும் பிறழ மாட்டேன். இந்த வாக்குறுதியை யான் முழு மனதுடன் கொடுக்கின்றேன்" என்று மோதிலால் எழுதியிருந்தார். அரசாங்கத்திற்கு மோதிலால் இந்த வாக்குறுதி அளித்ததற்கு ஏற்ற பரிசு உடனே கிடைத்தது. பரிசு என்ன என்று நினைக்கின்றீர்கள்! சிறைவாசம் தான்! அவருக்கு மட்டுமா? அவரது அருமைந்த மைந்தருக்குக் கூடத் தான். தந்தையும் மைந்தரும் ஒரே சமயத்தில் ஒரே நோக்கத்திற்காகச் சிறையில் வைக்கப்பட்டனர்!

மோதிலாலும், ஜவஹர்லாலும் சிறைக்குச் செல்ல நேர்ந்தபொழுது நேருவின் குடும்பத்தில் இருந்த பெண்டிரின் நிலையை யாம் கூறமுடியுமோ? ஆயின் அவர்கள் அனைவரும் வருத்தத்தை வெளியில் சிறிதும் காட்டவில்லை. அப்பொழுது அவர்களுடைய முகத்தில் புன்சிரிப்பே தவழ்ந்தது. இதுவன்றோ பெண்டிரின் பெரும் பண்பு! மோதிலாலின் மனைவியார் சீரிய தன்மைகள் பல வாய்ந்தவர். ஜவஹரின் வாழ்க்கைத் துணைவியாரோ தம் கணவர் சிறை புகுவதைப் பெரும் பேறாகக் கருதினார். இத்தகைய ஒரே நோக்கம் அமைந்த அன்பினால் பிணைக்கப்பட்ட குடும்பத்தை இந்தியாவில் காண்பதே அரிது.

மோதிலால் சிறை செல்லும் பொழுது தமது நண்பர்களுக்கு ஒரு செய்தி அனுப்பினார். ஆ! அச் செய்தியை உணர்ந்தவர்கள் பெரும் வியப்படையாமல் இருக்க முடியாது. அச் செய்தியின்

சுருக்கம் வருமாறு :—“நண்பர்களே! யானும் எனது அருமந்த மைந்தரும் சிறை செல்கின்றோம். எதன் பொருட்டு? நாட்டிற்கு விடுதலை கிடைக்கும் பொருட்டு! அரசாங்கத்திற்கு நம் கட்டுப்பாட்டை எடுத்துக் காட்டும் பொருட்டு! நம் நோக்கத்தை அரசாங்கம் நன்கு அறிந்து கொள்ளும் என்பது திண்ணம். அரசாங்கத்தினரின் கல்மனம் நம் செய்கையைக் கண்டு உருகும் என்பதில் ஐயமில்லை. யான் என்னால் இயன்ற அளவு உங்கள் இடையில் இருந்து உழைத்தேன். இப்பொழுது எனது நோக்கத்தைக் காரியத்தில் காட்டுகின்றேன். துன்பம் இல்லை என்றால் இன்பம் இல்லை. துன்பம் உற்றவர்க்கே இன்பம் கிட்டும். நான் விரைவில் சிறையிலிருந்து விடுதலை பெற்று உங்களைக் காணும் பேற்றைப் பெறுவேன். விரைவில் இந்தியா சுதந்திரத்தை அடைந்துவிடும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. உங்களை யான் முடிவாக வேண்டிக்கொள்வது ஒன்றுதான். அரசாங்கத்திற்கு எதிராக நடத்துகின்ற ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். சிறிதும் தயங்காதீர்கள். சுயராஜ்யம் கிடைப்பதே நமது முடிவான நோக்கம். நாட்டின் விடுதலைக்கு உழைப்பதற்காக ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டுங்கள். சிறையில் புகுவதற்குச் சிறிதும் அஞ்சாதீர்கள். சிறை புகுந்து துன்பமடைவதே சுதந்திரம் பெறுவதற்கு வழியாகும். கலகம் செய்யாதீர்கள். உங்களுடைய முயற்சியால் யாருக்கும் எந்தவிதமான தீமையும் உண்டாகக்கூடாது. விழிப்பீர்! எழுவீர்! உழைப்பீர்! சிறை புகுவீர்!”

மோதிலால் தம் நண்பர்களுக்கு விடுத்த இச்செய்தியால் நாட்டில் ஒரு புது உணர்ச்சி உண்டாயிற்று. உறங்கியவர்கள் விழித்தனர். தளர்ந்தவர்கள் நிமிர்ந்தனர். வாடிய உள்ளங்கள் தளிர்த்தன. ஒத்துழையாமை இயக்கம் தீவிரமாக நடந்து வந்தது. இது முதல் நேருவின் குடும்பத்தில் யாவரும் சிறை செல்வதும், விடுதலை பெறுவதும் வழக்கமாகப் போய்விட்டன.

மோதிலால் நேரு ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து காந்தியடிகளைப் பின்பற்றினார்; சிறை சென்றார்; பல தியாகங்களைச் செய்தார். என்றாலும் காந்தியடிகளின் வழியிலிருந்து சிறிது மாறுபட்ட வேறு வழியைப் பின்பற்றுவது நல்லது என்று அவரது மனம் நினைத்தது. அவருக்கு வங்கச் சிங்கமாகிய சித்தரஞ்சனதாஸ் என்பவரின் நட்புக் கிடைத்தது. அவ்விருவருமாக 'சுவராஜ் கட்சி' என்ற ஒரு புதிய கட்சியைத் தொடங்கினர். அதன் முதல் கூட்டம் ஆனந்த பவனத்திலேயே நடந்தது. சித்தரஞ்சனதாஸ் அக் கட்சியின் தலைவராக இருந்தார். மோதிலால் அதனது பொதுச் செயலாளராக இருந்தார். காந்தியடிகளின் நோக்கமும், மோதிலாலின் நோக்கமும் ஒன்றுதான். ஆனால் அவர்கள் பின்பற்றிய வழிகளே வேறாக இருந்தன. நமது இந்தியாவில் பல ஆறுகள் உள்ளன. அவை வெவ்வேறு திசைகளில் ஓடுகின்றன. ஆயின் அவை சேர்கின்ற இடம் கடல்தானே! அதுபோல மோதிலாலும், காந்தியடிகளும் பின்பற்றிய முறைகளே வேறுபட்டிருந்தன. அவர்களுடைய நோக்கம் சுதந்திரத்தைப் பெறுவதுதான். இதுபற்றி நாம் யாரையும் குறைகூறக் கூடாது.

1925-ஆம் ஆண்டில் சித்தரஞ்சனதாஸ் இவ்வுலக வாழ்வை நீத்தார். அதன் பிறகு மோதிலால் நேரு சுவராஜ் கட்சியின் தலைவரானார். சட்டசபைகளில் பலர் அங்கத்தினராவதும், அரசாங்கத்தின் உள்ளே இருந்துகொண்டே அரசாங்கத்தை எதிர்ப்பதும், அது மூலமாகத் தமக்குப் பல உரிமைகளைப் பெறுவதுமே மோதிலால் நேருவின் கருத்துக்களாகும். அவற்றிற்கு ஏற்ப மோதிலால் டில்லி சட்டசபையில் அங்கத்தினர் ஆனார்; அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதுபொழுது அவர் செய்த சொற்பொழிவுகளும், அரசாங்கத்திற்கு அவ்வப்பொழுது கொடுத்து வந்த தொல்லைகளும் கணக்கில் அடங்கா. சட்டசபைக் கூட்டங்களில் அவரது வாதத்தைக் கேட்டவர்கள் வாயடைத்துப் போவார்கள். யாருக்கும் அவரை எதிர்த்துப் பேசத் துணிவு வராது. இவ்வாறாக மோதிலால் பலருக்கு அச்சத்தை விளைவித்ததுடன், பலருடைய நன்மதிப்புக்கும் ஆளாகி இருந்தார்.

பின்பு மோதிலால் தமது மக்களுடன் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இந்தியா திரும்பினார். 1928-ஆம் ஆண்டு கல்கத்தாவில் காங்கிரஸின் ஆண்டுக் கூட்டம் நடந்தது. அதற்கு மோதிலால் நேருவே தலைமை தாங்கினார். அப்பொழுது நேருவின் குடும்பத்தினர் யாவரும் கல்கத்தா சென்றனர். அவர்களுக்கு அங்கு நடந்த உபசாரங்களுக்கு அளவில்லை. அக் கூட்டம் நன்றாக நடைபெறுவதற்கு முன்நின்று உழைத்தவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆவார். மோதிலால் நேரு வெளியில் செல்லும்பொழுதெல்லாம் ஒரு இளைஞர் கூட்

டம் குதிரைகளின்மேல் அணிவகுத்துச் செல்லும். அதன்பிறகு நேதாஜி தமது அழகிய இராணுவ உடையில் மோட்டாரில் நின்று கொண்டு செல்வார். மோதிலால் நேருவுக்கு யாராலும் எத்தகைய தீங்கும் உண்டாகாமல் பாதுகாக்கவே நேதாஜி இவ்வளவு கவனமாக நடந்தார்.

காங்கிரஸ் ஆண்டுக் கூட்டம் கல்கத்தாவில் நடந்தபொழுது தந்தைக்கும், மைந்தருக்கும் இருந்த சிறிய மன வேற்றுமை அதிகமாயிற்று. ஒருவரை ஒருவர் மிக அதிகமாக விரும்பினர் என்பது உண்மையே. ஆயின் அவர்களுடைய மனப் பான்மையே மிகவும் வேறுபட்டிருந்தது. அந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் ஜவஹர்லால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் தலைவர் பதவி தந்தையினிடமிருந்து மைந்தருக்குக் கிடைத்தது. மோதிலால் நேருவுக்கு இவ்வுலகில் இருந்த செல்வங் களுக்கெல்லாம் உரிமை பூண்டவர் ஜவஹர்லால் நேருவே யாவார். அத்தகைய உரிமை வாய்ந்த மைந்தருக்கு மோதிலால் தமது காங்கிரஸ் தலைமைப் பதவியையும் அளித்தார்! அப்பொழுது அவரது மனம் மிகப் பெருமிதம் கொண்டது. அறிவு மிக்க மைந்தனை அடைவதைக் காட்டிலும் இவ்வுலகத்தில் சிறந்தது வேறு உண்டோ!

1930–ஆம் ஆண்டில் காந்தியடிகள் உப்பு சத்தி யாக்கிரகத்தைத் தொடங்கினர். அப்பொழுது அலஹாபாத்திலும் அது நடந்தது. அதற்கு முன் னணியில் முனைந்து நின்றவர் ஜவஹர்லால் நேருவே யாவார். இந்தச் சத்தியாக்கிரகத்தின் பய னாக காந்தியடிகளும், ஜவஹர்லாலும் சிறை செய்

யப்பட்டனர். அந்தச் சமயத்தில் மோதிலால் உடல் நலம் மிகவும் குன்றியிருந்தார். அவருடைய உடல் நலம் குறைந்தது உண்மையே. ஆயின் அவரது மனம் இளைக்குமோ? அஃது இரும்பினும் வலியது அன்றோ? இவர் உப்பு சத்தியாக்கிரக இயக்கத்தினர்க்கு அவ்வப்பொழுது ஏற்ற நல்வழிகளைக் காட்டியும், நன்முறைகளைக் கூறியும் வந்தார். அவருக்கு அப்பொழுது ஓய்வே இல்லை. மோதிலால் நேரு கட்டாயமாக ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கண்டிப்பாகக் கூறினர். மோதிலால் அதற்குச் செவி சாய்க்கவில்லை; சத்தியாக்கிரகம் செய்தவர்களை ஊக்கப்படுத்தி வந்தார். அதன் பயனாக அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தியது. அரசாங்கத்தினர் அவருக்குச் சிறையில் ஓய்வு கொடுக்க நினைத்தனர் போலும்!

மோதிலால் நேரு பத்து வாரங்கள் சிறையில் இருந்தார். அவரது உடல் நிலை கவலையைத் தரத்தக்கதாகப் போய் விட்டது. எனவே அரசாங்கம் அவரை விடுதலை செய்தது. பின்பு மோதிலால் நேருவின் குடும்பம் மசூரி என்னும் இடத்திற்குச் சென்றது. அங்கு வீசும் சுத்தமான காற்றினால் மோதிலால் உடல் சுகமடையும் என்று யாவரும் கருதினர். ஜவஹரும் விடுதலை பெற்று அடிக்கடி தமது தந்தையைப் பார்த்து வந்தார். எனினும் மோதிலால் தமது பழைய இடத்திலேயே வசிக்க விரும்பியதால் அக்குடும்பம் மறுபடியும் அலஹாபாத்திற்குத் திரும்ப நேரிட்டது.

மோதிலால் அலஹாபாத்திற்கு வருவதற்குள்ளாக ஜவஹர் மறுபடியும் சிறை புக நேர்ந்தது.

தம் உடல் நலம் குன்றிய பொழுது தம் மைந்தரைப் பார்க்க முடியாதது மோதிலாலுக்கு மிக வருத்தத்தை உண்டாக்கியது. அவர் அரசியல் சம்பந்தமாகவும், குடும்ப சம்பந்தமாகவும், ஜவஹர்லாலினிடம் பலவற்றை விவாதிக்க விரும்பினர். என்ருலும் ஜவஹரை அவர் விரும்பியபடி பார்க்கமுடியவில்லை. அவரது உடல் தளர்ந்தது. எனினும் மனம் தளரவில்லை. அந்த நிலையிலும் அவர் அமைதியான சட்டமறுப்பு இயக்கத்திற்குப் பல விதங்களில் உதவி புரிந்தார். பிறகு சில நாட்களுள் அவரது மருமகளும், பெண்களும் ஒருவர் பின் ஒருவராகச் சிறை புகுந்தனர். இவை யாவும் சேர்ந்து அவரது மனத்தைப் பெரிதும் துன்புறுத்தி விட்டன. அவர் படுத்த படுக்கையாய் விட்டார்.

மோதிலால் நாட்டிற்குச் செய்த தொண்டுகள் ஒரு முடிவிற்கு வரும்காலம் நெருங்கிவிட்டது. இறுதிக்காலம் தமக்கு வந்ததைப் பற்றி அவர் கவலைப் படவில்லை. அவரது மனத்தில் ஒரே ஒரு ஆவல் இருந்தது. அஃது இந்திய தேசம் பூரண சுதந்திரம் அடைவதைப் பார்க்க வேண்டுமென்பதே யாகும். அவர் அதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அதுவரையில் தாம் உயிருடன் இருந்து உழைத்துச் சுதந்திர இந்தியாவைப் பார்க்க வேண்டும் என்பதே அவர் பெருவிருப்பமாகும். ஆனால் அவர் உயிருடன் உள்ளபொழுதே நாட்டின் பூரண விடுதலைக்குச் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். இன்று நம் நாடு சுதந்திரம் பெற்றிருப்பது, மோதிலால் நேரு போன்ற பெரியார்களின் தொண்டு

களாலும், உழைப்புகளாலும்தான் என்பதை நாம் மறக்க முடியாது.

4. மோதிலாலின் பிரிவு

மோதிலால் நேருவின் உடல் நிலை மிகக் கவலைக்கு இடம் தருவதாக இருந்த காரணத்தால் ஜவஹர்லால் நேரு விடுதலை செய்யப்பட்டார். மோதிலாலின் உடல் தளர்ந்து விட்டது. கண்கள் குழிந்தன; ஒளி மங்கியது; கை கால்கள் சோர்ந்து விட்டன. ஒரு கணமும் ஓயாது உழைத்து வந்த அவரது உடம்பு செயலற்றுக் கிடந்தது. அவரது மனம் பலவற்றை நினைத்தது. மைந்தரைப் பார்க்க வேண்டுமென்பதே அப்பொழுது அவருடைய மனத்திலிருந்த பேராவல்.

ஜவஹர் விடுதலை பெற்றவுடன் நேராக ஆனந்த பவனத்திற்கு வந்தார். வந்தவுடன் விரைந்து தந்தை படுத்திருந்த அறையின் அருகில் சென்றார். தந்தையின் அறைக்குள் எட்டிப் பார்த்தார். ஆ! அங்கு இருப்பது யார்? ஜவஹரால் நம்ப முடியவில்லை. தந்தையோ இவ்வாறு படுத்திருக்கிறார்! வாழ்நாள் முழுவதும் உழைத்த உருவமா அது? மின்சார சக்தியைத் தீண்டியவரைப் போல ஜவஹரின் உடல் நடுங்கியது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார்; உள்ளே நுழைந்தார். தந்தையைத் தழுவினார் தனயர். அங்கு அப்பொழுது பேச்சே கிளம்பவில்லை. ஜவஹரின் கண்களிலிருந்து நீர் சொரிந்தது. அப்பொழுது மோதிலாலின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! அம்முகத்தில் ஒரு ஒளி வீசியது. கண்களில் பெரு

மிதமும், மகிழ்ச்சியும் தோன்றின. உலகம் புகழும் உத்தம மைந்தரைப் பெற்ற பெருஞ்செருக்கு அக் கண்களில் நன்கு விளங்கியது. அந்த உருக்கமான காட்சியைக் கண்டவர்கள் அதை எக்காலத்திலும் மறக்க முடியாது.

இங்கிலையில் தேசத் தலைவர்கள் பலர் சிறையி லிருந்து விடுதலை செய்யப்பட்டனர். காந்தியடிகளும் சிறையிலிருந்து வெளியில் வந்தார். மோதிலாலின் உடல் நிலையைக் கேள்வியுற்றவுடன் அவர் விரைந்து அலஹாபாத்திற்கு வந்தார். காந்தியடிகளைப் பார்த்த வுடன் மோதிலாலுக்கு மிக மகிழ்ச்சி உண்டாயிற்று. காந்தியடிகளின் வருகை அவருக்குப் பெரிய ஆறுத லாக இருந்தது. பல தலைவர்கள் ஆனந்த பவனத்தில் வந்து கூடினர்.

மோதிலால் படுக்கையில் கிடந்த பொழுது அவ ரது மக்களுள் ஒருவரோ, மனைவியோ யாரேனும் ஒருவர் அவருக்கு அருகில் எப்பொழுதும் இருந்து வந்தார். மோதிலால் இறக்கும் வரையில் தமக்கு வழக்கமான விளையாட்டுப் பேச்சுக்களை விடவில்லை. அவர் ஒரு சமயம் காந்தியடிகளுடன் விளையாட்டா கப் பேசுவார்; ஒரு முறை தமது மனைவியைப் பரிகாசம் செய்வார். அவர் காந்தியடிகளுடன் பேசும்பொழுது ஒரு சமயம், "நண்பரே! இந்தியா வைப் பற்றிய வாதங்களை சுவராஜ் பவனத்தில் நடத்துங்கள். எந்த முடிவையும் அவ்விடத்திலேயே செய்யுங்கள். அப்பொழுது அங்கு நானும் இருக்க விரும்புகிறேன். தாய்நாட்டின் பிற்காலத்தை முடிவு செய்தவர்களில் யானும் ஒருவனாக இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். நான் இறக்

கத்தான் வேண்டும். இறவாமல் இருக்க முடியாது. சுதந்திர இந்தியத் தாயின் மடியிலேயே நான் இறக்க ஆசைப்படுகின்றேன்" என்றார். அவரது மனம் தாய் நாட்டு விடுதலையில் எவ்வளவு ஆவல் கொண்டிருந்தது என்பதை நாம் இதனின்றும் நன்கு அறியலாம்.

மோதிலாலின் உடல் வரவர மிகவும் சுருங்கி விட்டது. அந்த நிலையில் அவரை லக்னோவிற்கு எடுத்துச் செல்வது நலம் என்று மருத்துவர்கள் கூறினர். மோதிலால் அதற்கு இணங்கவில்லை. பலரும் வற்புறுத்தவே மோதிலால் கடைசியில் லக்னோவிற்குப் போவதற்கு ஒப்புக்கொள்ள நேர்ந்தது. லக்னோவிற்குச் சென்ற மறுநாள் இரவு கழிவதற்குள் மோதிலாலின் ஆவி இம் மண்ணுலகை விட்டு நீங்கிவிட்டது. அவரது ஆவி பிரியுங்கால் அவரது அருமை மைந்தரும், உரிமை மனைவியும், மருத்துவர்களுமே விழித்திருந்தனர்.

மோதிலால் நேருவின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்ததைக் கேள்வியுற்றவுடன் வீட்டில் எல்லோரும் விழித்துக்கொண்டனர். இறந்த தம் தந்தையின் பின்புறம் ஜவஹர் அமர்ந்திருந்தார். அவருடைய கை தந்தையைத் தாங்கியவாறு இருந்தது. அவருடைய கண்களில் நீர் சொரிந்து கொண்டிருந்தது. மோதிலாலின் பெண்களும், மருமகளும் ஏங்கியவாறு நின்றனர். காந்தியடிகள் மோதிலாலின் உடலுக்கு அருகே வந்து தலைகுனிந்து நின்றார். தம் நண்பரது வெற்றுடம்பைப் பார்க்க விரும்பாதவர் போல் அவர் கண்கள் மூடின. தமது நண்பரின் ஆன்மா அமைதியை அடையும் பொருட்டு

இறைவனை வேண்டினார். பிறகு அவர் மோதிலால் நேருவின் மனைவியினிடம் சென்றார். அந்த அம்மையாரது நிலையை நம்மால் எழுத முடியாது. மோதிலால் நேருவின் வாழ்விலும், தாழ்விலும் இன்பத்திலும், துன்பத்திலும் சமமான பங்கு எடுத்துக் கொண்டவர் அந்த அம்மையார். தம் கணவர் இறந்தார் என்பதைக் கேட்டவுடன் அவர் 'ஐயோ' என்று பெருங்குரலில் கதறினார். அதன் பிறகு அவர் ஒரு மூலையில் சோர்ந்து அமர்ந்துவிட்டார். அவரை எப்படித் தேற்றுவது? காந்தியடிகள் அவ்வம்மையாரிடம் சென்றார். அவரது தோளைத் தொட்டு, "அம்மையே! வருந்தாதீர்! மோதிலால்ஜீ இறக்கவில்லை. அவர் உடலே இறந்தது. அவர் நம்மிடையே எப்பொழுதும் புகழுடன் இருப்பார். இந்தியா உள்ள வரையில் அவரது பெயர் மறையாது. இந்தியச் சரித்திரத்தில் அவரது பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்; கலங்காதீர்" என்றார்.

மோதிலால் நேரு இறந்தது லக்னோவில் ஆகும். பிறகு அவரது உடல் அலஹாபாத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவருடைய உடல் இருந்ததே தெரியாத விதத்தில் பூமாலைகள் மூடிவிட்டன. அலஹாபாத்திற்குச் செல்லும் வழிநெடுகக் கூட்டம் சொல்லி முடியாது. அலஹாபாத்தில் அன்று வருந்தாதவர்கள் எவரும் இலர். எல்லோருடைய கண்களும் நீரைச் சொரிந்தன. அலஹாபாத்தில் அத்தகைய கூட்டம் எப்பொழுதும் கூடியதே இல்லை.

நூறாயிரத்திற்கு மேலான மக்கள் கங்கைக் கரையில் கூடினர். அவ்விடத்தில் மோதிலால் நேரு

வின் உடலுக்கு இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டன. அதன்பின் அந்தப் பெருங்கூட்டத்தில் காந்தியடிகள் பேச எழுந்தார். அவ்வளவு பெருங்கூட்டத்தில் சிறிதுகூடக் குழப்பமோ சத்தமோ உண்டாகவில்லை. எங்கும் அமைதி நிலவியது. காந்தியடிகள் "மோதிலால் நேருவுக்கு ஒரே விருப்பம் இருந்தது. இந்தியா சுதந்திரம் அடையவேண்டும் என்பதே அவ்விருப்பம் ஆகும். அதன் பொருட்டே அவர் வாழ்ந்தார்; உழைத்தார்; துன்பமுற்றார்; இன்று இறந்தார். இங்குக் கூடியுள்ள நீங்கள் யாவரும் இப்பொழுது ஒரு உறுதியைக் கைக்கொள்ள வேண்டும். 'இந்தியா விடுதலை பெறும் வரையில் நான் நிம்மதியாக இருக்கமாட்டேன்' என்று ஒவ்வொருவரும் இந்தப் புண்ணியமான இடத்தில் சத்தியம் செய்து கொள்ளுங்கள். அதன்படி நீங்கள் நடப்பதே நம்மைவிட்டுப் பிரிந்த மோதிலால் நேருவுக்கு நாம் செய்யும் பதிலுதவியாகும். அவரது ஆன்மா அப்பொழுதுதான் மகிழ்ச்சியை அடையும்" என்று பேசினார். பிறகு பண்டித மதன்மோஹன மாளவியாவும் பேசினார். "மக்கள் தம்முடைய வேறுபாடுகளை நீக்கி ஒன்றுபட வேண்டும்; அதன் பொருட்டுத்தான் மோதிலால் பாடுபட்டு உழைத்தார்; இந்தியா பூரண சுதந்திரம் அடைவதற்குத் தம் உயிரையே கொடுத்தார்; அவரது விருப்பம் நிறைவேறும்படி செய்வது எல்லோருடைய கடமையாகும்" என்று மாளவியாஜி பேசினார்.

மோதிலாலின் மறைவை அறிந்த இந்தியா முழுவதும் துயர்க்கடலில் மூழ்கியது. இரண்டு

நாட்களுக்கு எங்கும் கடைகள் அடைக்கப்பட்டன. கல்விச் சாலைகள் மூடப்பட்டன. வியாபாரம் ஒரு இடத்திலும் நடக்கவில்லை. பல இடங்களில் கூட்டங்கள் நிகழ்ந்தன. மோதிலாலின் அரும் பெருங் குணங்களைப் பலர் பேசினர். நேருவின் குடும்பத்திற்கு அனுதாபச் செய்திகள் வந்தவண்ண மிருந்தன. மோதிலால் நேருவின் பிரிவு நம் நாட்டிற்கு ஒரு பெரிய நஷ்டமாகும். பிரிவைக் குறித்து வெளியிட்ட செய்தியில் காந்தியடிகள், "கணவனை இழந்த ஒரு மனைவியின் நிலையைக் காட்டிலும் எனது நிலை மிகவும் இரங்கத்தக்கது. கணவனை இழந்த விதவை ஒருத்தி தன் கணவனின் நற்குணங்களைப் பின்பற்றலாம். மோதிலாலின் நற் குணங்கள் எனக்கு வருமோ? மோதிலால் பிரிந்த நஷ்டத்தை என்னால் ஈடுபடுத்தவே முடியாது" என்று எழுதியுள்ளார்.

மோதிலால் நேருவின் பிரிவு பலருக்கு வருத் தத்தை உண்டாக்கிவிட்டது உண்மையே. ஆனால் அதுவே அவரது கொள்கையைப் பலரும் பின் பற்றுமாறு தூண்டியது என்று கூறலாம். அதன் பயனாகப் பலர் தேசத்தொண்டு செய்வதில் தீவிர மாக முயன்றனர். அவர்களுடைய முயற்சியினால் தான் இன்று நாம் சுதந்திர இந்தியாவில் வாழ் கின்றோம்.

5. நல்லியல்புகள்

மோதிலால் நேருவின் வாழ்க்கை இவ்வுலகத் திற்கே ஒரு வழிகாட்டியாக உள்ளது. அவர் செல் வத்தில் திளைத்தார். துன்பமென்பதையே சிறிதும்

அறியாது இருந்தார். அப்படிப்பட்டவர் தம் செல்வத்தைப் பொருட்படுத்தவில்லை. அருமையாகத் தான் வாங்கிய ஆனந்த பவனத்தை நாட்டிற்கே நன்கொடையாகக் கொடுத்தார். பெரும்பொருள் வருவாயை அளித்து வந்த தம் வழக்கறிஞர் தொழிலை நாட்டுத் தொண்டு செய்வதற்காக விடுத்தார்; சிறை சென்றார்; துன்பமுற்றார்; மக்களை விடுதலைப் பாதையில் செலுத்தினர்.

மோதிலால் பெருஞ் செல்வத்தைச் சேர்த்தது உண்மையே. ஆயின் அவர் அப்பொருளைச் சிறிதும் பொருட்படுத்தவே இல்லை. அவருடைய வீட்டில் விருந்தினர்கள் பலர் எப்பொழுதும் இருந்து வந்தனர். கும்பமேளா என்ற திருவிழாக் காலத்தில் ஆனந்த பவனத்தில் பலர் வந்து தங்குவர் என்று குறிப்பிட்டோம். அக்காலத்தில் விருந்தினரின் முகங் கோணுதவாறு அவர் உபசரித்தார். தாம் சேர்த்த பொருளைப் பிறருக்கு வழங்குவதில் அவருக்குப் பெருமகிழ்ச்சி இருந்தது. நமது இந்தியர்களுக்கு விருந்தினரை உபசரிக்கும் தன்மை இயற்கையிலேயே உண்டு. அத்தன்மை மோதிலால் நேருவினிடம் மிகுதியாக இருந்தது.

வழக்கறிஞர் தொழிலை விடுக்க நேர்ந்ததைப் பற்றி அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. தமது வீட்டில் ஆடம்பர வாழ்க்கையை அகற்றி எளிய வாழ்க்கையைப் பின்பற்ற அவர் சிறிதும் தயங்கவில்லை. எளிய வாழ்க்கை இன்னதென்பதையே இளமை முதல் அறியாது வாழ்ந்த மோதிலால் நேரு எளிய வாழ்க்கையைப் பின்பற்றியது வியப்

பன்றோ? மோதிலால் வழக்கறிஞர் தொழிலை விடுத்த பிறகு அவருடைய பழைய கட்சிக்காரர்கள் மிக வருத்தமடைந்தனர். தம் வழக்கை மோதிலால் நடத்துவதாக இருந்தால் மிகப் பெரும் பொருளைக் கொடுக்க முன்வந்தனர் பலர். மோதிலால் அந்த ஆசை வார்த்தைகளில் மயங்கவில்லை.

ஒரு முறை ஒருவர் ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதாகவும், மறுக்காமல் தம் வழக்கை நடத்தித்தர வேண்டும் என்றும் மோதிலாலைக் கட்டாயப்படுத்தி வேண்டிக்கொண்டார். அப்பொழுது மோதிலாலுக்குப் பணம் தேவையாகவே இருந்தது. அது சமயம் அருகில் அவரது அருமை மகள் கிருஷ்ணுவும் இருந்தார். மோதிலால் தமது மகளை அழைத்து 'குழந்தாய்! இந்த வழக்கை நான் எடுத்துக் கொள்ளலாமா? அது பொருந்துமா? உனது கருத்தென்ன'? என்று கேட்டார். அதற்கு அம்மகள் 'தந்தாய்! கூடவே கூடாது. தேசத்தின் தொண்டிற்காக வழக்கறிஞர் தொழிலை விடுவதாகப் பலரும் அறியக் கூறினீர். அப்படிப்பட்ட தாங்கள் மறுபடியும் அத் தொழிலைக் கைக்கொள்வது சரியன்று' என்றார். தந்தையின் கருத்திற்கேற்ற மகள்! மோதிலால் தமது மகள்கூட விருப்பப்படாததை ஒரு காரணமாகக் காட்டி அவ்வழக்கை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். இதுவன்றோ திண்ணிய மனத்திற்கு இயல்பு! மோதிலால் தம் வாக்குறுதியை மீறுவதில்லை என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு சான்று வேண்டுமோ! வரும் பொருளை வேண்டாமென்று மறுப்பவரே மிகப் பெரியவர் ஆவார்.

மோதிலால் நேரு தொடக்கத்தில் மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கி யிருந்தாராலும், அவரது வீட்டில் மேனாட்டு நாகரிக அடையாளங்கள் மிகுதி யாக இருந்தன. என்றாலும் அவர் ஒரு உண்மை இந்தியராகவே விளங்கினார். ஆனந்த பவனம் அமைந்த இடமே பரிசுத்தம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். ஆனந்த பவனத்திலிருந்த கோடை விடுதியில் சிவனின் உருவம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது என்று கூறினோம். மோதிலாலின் மனம் இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தது. இந்துக்களுக்குப் பொதுவான பல வழக்கங்களும், நம்பிக்கைகளும் அவருடைய குடும்பத்தினரிடம் மிகுதி யாக விளங்கின. ஆனந்த பவன மாளிகையின் பின்புறத்தில் பல தனி விடுதிகள் இருந்தன. அவற்றுள் கரியும், மரக்கட்டைகளும், பழைய சாமான் களும் போடப்பட்டிருந்தன. அவற்றுள் ஒரு விடுதி யில் ஒரு பெரிய நல்ல பாம்பு வசித்து வந்தது. அப் பாம்பு யாருக்கும் எவ்விதமான துன்பத்தையும் உண்டாக்குவதில்லை. அதைப் பார்த்த யாவரும் அதற்கு ஒரு தீமையும் செய்யமாட்டார்கள். அதைக் கண்டு ஒருவரும் அஞ்சுவதில்லை. அந்த நல்ல பாம்பு அங்கு வசிக்கும் வரையில் அந்தக் குடும்பத்திற்கு ஒரு குறையும் வராதென்றும், செல்வமும் புகழும் வளரும் என்றும் நேருவின் குடும்பத்தினர் கருதினர். ஆனால் 1920-ஆம் ஆண்டில் ஒரு நாள் ஒரு புதிய வேலைக்காரன் அப்பாம்பினைக் கொன்றுவிட்டான். அதையறிந்த ஏனைய வேலைக்காரர்கள் மிக அச்சம் கொண்டனர். அதனால் நேருவின் குடும்பத்திற்கு

எத்தகைய தீங்குகள் நேருமோ என்று அவர்கள் கலங்கினர். அந்தச் சமயத்தில்தான் மோதிலால் தமது வழக்கறிஞர் தொழிலை விடுத்து நாட்டுப் பணியில் ஈடுபட்டிருந்தார். அதன் பிறகுதான் மோதிலாலும், அவரது மைந்தரும் சிறை செல்ல நேரிட்டது. அக் குடும்பத்தின் பொருள் வருவாய் குறைந்தது. இவற்றிற்கெல்லாம் காரணம் அப் பாம்பு கொல்லப்பட்டதே என்று வேலைக்காரர்கள் கருதினர். ஏன்? அக் குடும்பத்தினரில் சிலரும் அதை நம்பினர். நேருவின் குடும்பத்தில் இந்தியப் பழக்க வழக்கங்கள் மறையவில்லை என்பதற்கு இஃது ஒரு சான்று ஆகும்.

மோதிலால் தமது மைந்தரைக் கல்வியறிவில் சிறந்தவராகக் கருதினர். அதன் பொருட்டு அவரை இங்கிலாந்திற்கு அனுப்பினர். தமது மைந்தர் உலகத்தில் சான்றோர் என்று பெயர் வாங்க வேண்டும் என்பதே அவரது விருப்பம். அதற்கேற்ப அவர் செய்து முடித்து விட்டார். "ஒரு தந்தை மகனுக்குச் செய்யும் உதவி, அம் மகனை அறிஞர் சபையில் முன்னணியில் நின்று புகழ் பெறுமாறு செய்வதே யாகும்" என்பது திருவள்ளுவனார் கருத்தாகும். அதன்படியே மோதிலால் தம் மைந்தரை முன்னணியில் நிற்குமாறு செய்தார். அவரது மைந்தரும் தம் தந்தைக்குப் பெரும் புகழை வாங்கித் தருகின்றார். மகன் தனது தந்தைக்குச் செய்யும் உதவியும் ஒன்று உண்டு. 'இம் மகனைப் பெறுவதற்கு இவனது தந்தை எத்தகைய தவத்தைச் செய்தார்' என்று எல்லோரும் புகழும்படி செய்வதே மகனது கடமையாகும்.

ஜவஹர்லாலும் தமது தந்தையின் பெயரை நிலை நாட்டுகிருர் என்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

மோதிலால் தமது பெண்கள் இருவருக்கும் சிறந்த கல்வியை அளித்தார். அவ்விருவருக்கும் இளமையில் ஆங்கிலப் பெண்டிரே கல்வி கற்பித் தனர். மேனாட்டு முறையில் அவர்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டு வந்தது என்றாலும் அவ்விருவரும் இந்தியப் பழக்க வழக்கங்களை விட்டுவிடவில்லை. பின்பு அவ்விருவரும் மோதிலாலும் ஜவஹர்லா லும் செய்த நாட்டுத் தொண்டில் பங்கெடுத்துக் கொண்டனர். இன்று அவர்கள் சிறந்த தேசப் பற்று வாய்ந்தவர்களாக விளங்குகின்றனர். மோதி லால் நேரு தம்முடைய பல வேலைகளுக்கு இடையில் தமது குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியையும், ஒழுக்கங்களையும், நாட்டுப் பற்றையும் ஊட்டுவதை மறக்கவில்லை.

மோதிலால் நேரு தமது மைந்தருக்குத் திரு மணத்தை மிகச் சிறப்பாக நடத்தினர். அவர் எப்பொழுதுமே விருந்தினரை உபசரிப்பதில் மிகப் பெயர் பெற்றவர். எனவே மைந்தருடைய திரு மணத்தின் பொழுது அவர் தமது உறவினர்களுக் கும், நண்பர்களுக்கும் பல உபசாரங்கள் செய்தார். அவ்வாறே அவர் தமது மூத்த மகளின் திருமணத் தையும் சிறப்புறச் செய்து முடித்தார். அத் திரு மணம் காஷ்மீர முறையிலேயே நடத்தப்பட்டது மோதிலால் மேனாட்டுக் கல்வியைக் கற்று, மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றியவரேயாயினும் அவர்

தமது குல வழக்கங்களைச் சிறிதும் நழுவவிடவில்லை என்பதை இவற்றால் நன்கு அறியலாம்.

மோதிலால் நேரு தம் வேலையில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். வழக்குகளை வாதிக்கும் பொழுது அவரைக் கண்டவர்கள் மறுத்துப் பேச அஞ்சுவார்கள். வீட்டிற்கு வந்தவுடன் தமது குழந்தைகளுடன் விளையாட்டாகப் பேசுவார். சமயம் வாய்த்த பொழுதெல்லாம், அவர் பல வேடிக்கைப் பேச்சுகளைப் பேசத் தவறியதில்லை. அவர் செய்கின்ற சில காரியங்கள் பிறருக்குப் பெருநகை உண்டாக்கினாலும் அவர் பொருட்படுத்தமாட்டார். பிறர் பரிகாசம் செய்வரே என்று நினைக்கமாட்டார். தமது மனத்திற்கு எது சரியென்று தோன்றியதோ அதைச் செய்யப் பின் வாங்கமாட்டார். அவர் ஒருமுறை தம் குடும்பத்தோடு மேல் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அக்குடும்பம் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தது. அவர்கள் பாரிஸ்மா நகரத்தில் தங்கியிருந்த பொழுது மோதிலால் லண்டனுக்குச் சென்றார். அப்பொழுது அவர் தம் இளைய மகளை அழைத்து, 'குழந்தாய்! லண்டனிலிருந்து உனக்கு என்ன வாங்கி வரவேண்டும்?' என்று கேட்டார். அம் மகளும், தனக்குத் தோலினால் செய்யப்பட்ட கோட்டு ஒன்று வேண்டுமென்று கேட்டாள். மோதிலால் லண்டன் சென்றுவிட்டார். ஆனால் அவர் தமது மகளின் அளவைத் தெரிந்து கொண்டு செல்ல மறந்துவிட்டார். தமது மகள் விரும்பியதைக் கட்டாயமாக வாங்கிச் செல்ல வேண்டும் என்பது அவரது விருப்பம். ஆனால் அவளுக்குப் பொருத்தமான கோட்டு வாங்கு

வதற்கு அளவில்லையே? என்றாலும், அவர் என்ன செய்தார் தெரியுமா? கடைக்குச் சென்றார்; தமது மகளின் உயரமும் பருமனும் வாய்ந்த பெண்களை வரவழைக்குமாறு அக்கடை முதலாளியிடம் கூறினார். அம் முதலாளிக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே மோதிலால், 'என் மகளுக்குக் கோட்டு வாங்க வேண்டும்; அதற்கேற்ற அளவை நான் தெரிந்துகொண்டு வரவில்லை; 5 அடி 2 அங்குலம் உயரமுள்ள சில பெண்களை அழைத்து வாருங்கள். என் மகள் போல் இருப்பவளைக் குறிப்பிடுகின்றேன். அவ்வாறு குறிப்பிடும் பெண்ணுக்குச் சரியாக இருக்கும் கோட்டை நான் வாங்கிச் செல்கின்றேன்' என்று கடைக்காரரிடம் கூறினார். கடைக்காரர் இதைக் கேட்டுப் பெருநகை செய்திருப்பார் என்பது நிச்சயம். முடிவில் அக் கடைக்காரர் மோதிலாலின் இஷ்டப்படியே தனது கடையில் வேலை செய்யும் பெண்களை வரிசையாக நிறுத்தினார்; கோட்டைப் போட்டுப் பார்க்குமாறு செய்தார்; மோதிலால் குறிப்பிட்ட கோட்டைப் பெற்றுச் செல்லுமாறும் செய்தார். இச் செய்தியை மோதிலால் தமது மக்களிடம் கூறியபொழுது அவர்கள் சிரித்த சிரிப்பிற்கு அளவில்லை. அது காரணமாக அவர்கள் தம் தந்தையைப் பரிகாசம் செய்தனர்.

மோதிலால் அயல் நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது தமது தினசரிக் கடமைகளைச் செய்யத் தவறியதே இல்லை. அவர் ஒரு முறை தம் குடும்பத்துடன் ரஷ்யாவில் உள்ள மாஸ்கோ நகரத்தில் கிராண்ட் ஹோட்டல் என்னும் உணவு விடுதி

யில் தங்கினார். அங்கு முழுகுவதற்கு வெந்நீர் கொடுக்கும் வழக்கம் இல்லை. அவருடைய மக்கள் யாவரும் சிறிது வெந்நீர் பெற்று முகத்தைக் கழுவிக் கொண்டனர். ஆனால் மோதிலால் நன்றாக வெந்நீரில் நாள்தோறும் முழுகுவது வழக்கம். அந்த வழக்கத்தை அவர் விட்டுவிட இசையவில்லை. எந்த இடமாக இருந்தாலும் அவர் முழுகத் தவறமாட்டார். அங்கிருந்த பணியாட்கள் அவருக்கு விருப்பமான அளவு வெந்நீர் தர முணுமுணுத்தனர். ஆனால் மோதிலால் நேரு அவர்களை விடவில்லை. கட்டாயப்படுத்தித் தமக்கு வேண்டிய அளவு வெந்நீரைப் பெற்று நன்றாக முழுகினார். அவர்கள் யாவரும் இவரது செய்கையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். தாம் எங்கிருந்தாலும் தமது தினசரிக் கடமைகளைச் செய்து முடிக்க அவர் பின் வாங்க மாட்டார். அத்தகைய பிடிவாதத் தன்மை அவரிடம் இருந்தது.

மோதிலால் தமது மக்களிடம் வைத்திருந்த அன்பு இத்தகையது என்று சொல்ல முடியாது. அவர் தமது ஒரே மைந்தராகிய ஜவஹர்லாலினிடம் தம் உயிரையே வைத்திருந்தார் என்று சொல்லலாம். தமது மைந்தர், சிறை செல்லத்தான் வேண்டும் என்று வாதம் செய்தபொழுது, அவர் மறுத்ததற்கு ஒரு மறைமுகமான காரணம் உண்டு. தமது செல்வ மைந்தர் வெறுந்தரையில் படுத்திருக்க முடியாது என்றும், அவரது உடல் அதனால் கெட்டு விடும் என்று கருதியே மைந்தர் சிறை செல்லக் கூடாது என்று அவர் முதலில் தடை செய்தார். அவர் சில இரவுகள் யாருக்கும் தெரியாமல்

வெறுந் தரையில் படுத்துப் பார்த்தார். "வெறுந் தரையில் படுத்தால் எப்படி யிருக்கும்? பஞ்சு மெத்தையில் படுத்துப் பழகிய அருமந்த மைந்தர் வெறுந் தரையில் படுக்க முடியுமோ?" என்று அவர் ஆராய்ச்சி செய்து பார்த்தார். என்னே தம் மைந்தரிடம் அவர் கொண்டிருந்த அன்பு! அறிவும், சீலமும், கல்வியும், திறமையும் ஒருங்கு வாய்ந்த தம் மைந்தரையே தமது உயிராக அவர் கருதியிருந்ததில் வியப்பென்ன இருக்கிறது?

மோதிலால் நேரு நல்ல கட்டமைந்த உடம்பைப் பெற்றவர். முகத்தில் அறிவுக் களை நன்கு விளங்கும. கண்கள் அறிவு நுட்பத்தை நன்றாக வெளிப்படுத்தும். அவரிடம் பிடிவாத குணம் வாய்ந்திருந்தது உண்மையே என்றாலும் அவரைப் பார்த்தவர்கள் யாவரும் அவரது முகப் பொலிவால் கவரப்படுவார்கள் என்பது திண்ணம். நரைத்த தலையுடன் வெண்மையான கதர் உடையுடன் அவர் அளித்த காட்சி மக்கள் மனத்தை விடுத்து எப்பொழுதும் அகலாது. அவர் எத்தகைய மக்களின் கூட்டத்தில் இருந்தாலும் அவரே எல்லோருடைய கவனத்தையும் கவர்வார். அவரிடம் சிறிது முன் கோபம் இருந்தது. எனினும் அஃது அவரது நற்குணங்கள் வெளிப்படுவதைத் தடை செய்யவில்லை. அவர் இந்திய தேசத்தின் பொருட்டே உயிர் வாழ்ந்தார்; உழைத்தார்; பொருளைத் தியாகம் செய்தார்; முடிவில் இந்தியாவின் விடுதலைக்காகவே உயிரை விடுத்தார். இத்தகைய சிறப்பியல்புகள் வாய்ந்த பெரியார்கள் உலகத்தில் மிகச் சிலரேயாவர். மோதிலாலின் வாழ்க்கை வரலாறு நமக்கு நல்ல

வழிகாட்டியாக விளங்குகிறது. அவரிடம் குடிகொண்டிருந்த அன்பு, பொறுமை, அவையஞ்சாமை, நாட்டுப்பற்று, தியாகம் முதலிய சிறந்த தன்மைகளைப் பழகிக்கொள்வது நமக்குப் பெரும் பயனைக் கொடுக்கும என்று துணிந்து கூறலாம்.

6. நேருவின் குடும்பத்தினர்

இனி மோதிலால் நேருவின் குடும்பத்தினரைப் பற்றிச் சிறிது அறிவோம். அக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் ஒவ்வொரு புத்தகம் எழுதவேண்டும். அவரது பெருந்தவப் புதல்வராகிய ஜவஹர்லால் நேருவைப் பற்றி எழுதினுல் அது பல புத்தகங்கள் ஆகிவிடும். மோதிலால் நேருவுக்கு ஜவஹர்லால் ஒரே மைந்தர். அம் மைந்தரைத் தவிர மோதிலாலுக்கு ஸ்வரூப், கிருஷ்ணு என்று இரண்டு பெண்கள் உள்ளனர். மோதிலால் நேருவின் மனைவியார் சிறந்த இலக்கணங்கள் வாய்ந்திருந்தார். தமது கணவர் சொல்லியதே அவருக்கு வேத வாக்கு. தம் கணவரை அவர் எதிர்த்துப் பேசியதே இல்லை. கணவர் இறந்தபிறகு அவரது மனம் தேசத் தொண்டிலேயே சென்றது. தமது கணவரது கொள்கையைப் பின்பற்றுவது தம்முடைய கடமை என்று அந்த அம்மையார் கருதினுர். தீராத மனநோய், தியாகம், தொல்லைகள் முதலியனவே அந்த அம்மையார் வாழ்க்கையில் நிறைந்திருந்தன. அவர் 1938-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

அவரது பிரிவு அவருடைய மக்களுக்கும், உலகத்திற்கும் ஒரு பெரிய நஷ்டமாகும்.

மோதிலால் நேருவின் அருமந்த மைந்தராகிய ஜவஹர்லால் நேருவை உலகம் நன்கு அறியும். இன்று உலகத்தில் ஜவஹர்லால் நேருவைப் பற்றி அறியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்து, துன்பம் என்பதையே அறியாது இளமையில் வாழ்ந்த அவர் திடீரென்று இன்பங்களை வெறுத்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அவரது இல்லற வாழ்க்கையிலும் அவருக்கு அதிக இன்பமில்லை. அந்தோ! அவர் எத்துணை முறைகள் சிறை சென்றார்! நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தரவேண்டும் என்பதற்கு அவர் பட்டபாட்டைச் சொல்லி முடியாது. அவர் யாரிடமும் கடுமொழிகள் கூறுவதில்லை. ஆனால் வாதத்தில் யாரையும் அவர் எளிதில் விட்டு விடமாட்டார். தந்தையாரானாலும் அவர் தயங்குவதில்லை. காந்தியடிகளைப் பின்பற்றத் தயங்கிய தந்தையுடன் அவர் செய்த வாதங்கள் பல. தாம் உண்மை என்று கண்டதை அவர் எடுத்துக் காட்டப் பின்வாங்குவதே இல்லை. உறவினராயினும், நண்பர்களாயினும் அவர்களுடைய குற்றங்களை எடுத்துக் காட்ட அவர் சிறிதும் அஞ்சமாட்டார். நடுநிலைமையைக் கைக்கொண்ட உத்தமருக்கு அவரே ஒரு சிறந்த உதாரணம் ஆவார்.

ஜவஹர்லால் காந்தியடிகளின் உண்மை மாணவர். தமது அரிய தந்தையின் சில கருத்துக்களுக்கு மாறான கருத்துக்கள் காந்தியடிகளிடம்

இருந்ததை அவர் அறிந்தும் காந்தியடிகளையே பின்பற்றினர்; காந்தியடிகள் தொடங்கிய பல இயக்கங்களின் முன்னணியில் நின்று போர் செய்தார்: எத்தகைய போர்? கத்தியில்லை; இரத்தமில்லை; சத்தியத்தையே அவர் வாளாகக் கொண்டார். நீதியே வெல்லும் என்பது ஜவஹருக்கு நன்கு தெரியும். நேர்மையான முறையில் பாடுபட்டார். அதன் பலனாக இன்று நாம் சுதந்திர இந்தியாவில் வாழ்கின்றோம். அவரது உழைப்பின் பயனை இன்று நாம் அடைகின்றோம். இன்று இந்தியாவில் ஜவஹர்லால் மக்களின் கண் போல் விளங்குகிறார். நமக்குத் தலைவராகவும் விளங்குகிறார். அவர் செய்யும் தொண்டுகளை உலகம் புகழ்கின்றது. பல சொல்லி என்? காங்கிரஸின் பகைவர்களும் அவரைப் போற்றுகின்றனர். இத்தகைய சிறப்பு அவருக்குக் கிடைத்தது காந்தியடிகளின் நட்பினாலேயேயாகும் என்று துணிந்து கூறலாம். ஆயினும் ஜவஹரைச் சீரிய வழியில் செலுத்திய பெருமையில் பெரும் பங்கு அவரது தந்தையாராகிய மோதிலால் நேருவுக்கும் உரியதாகும். ஜவஹர்லால் போன்ற தனிப் பெருந் தலைவர் நமது இந்தியாவில் வாழ்வதால் நமக்குக் கிடைத்துள்ள சிறப்புக்களுக்கு அளவில்லை. இன்று இந்தியா பிற நாடுகளால் போற்றப்படுவதற்குக் காரணர்களாக இருப்பவர்களின் முன்னணியில் நிற்கின்றவர் பண்டித ஜவஹர்லால் நேருவேயாவார். அவரை நமக்கு அளித்த பண்டித மோதிலால் நேருவுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். தேசத் தலைவர்கள் வாழ்க!

ஜவஹர்லால் நேருவின் இல்வாழ்க்கைத் துணைவியார் கமலா நேரு ஆவர். அந்த அம்மையாருடைய அரும்பெருங் குணங்களை நம் நாட்டுப் பெண்கள் பின்பற்ற வேண்டும். அவர் இல்லற இன்பங்களை அதிகமாக அனுபவிக்கவில்லை. அவர் தம் கணவரைப் பிரிந்து வாழ்ந்த நாட்கள் கணக்கில் அடங்கா. தம் கணவருடைய தேசத் தொண்டிற்கு அவர் பேருதவி செய்தார்; சிறைச்சாலையிலும் துன்புற்ருர்; நாட்டு மக்களுக்குச் சிறந்த தொண்டுகள் செய்தார். கடவுள் அவருக்குச் சிறந்த உடல் நலத்தை அளிக்கவில்லை. அவர் எப்பொழுதும் இளைத்த உடலுடன் இருந்தார். ஆனல் அவரது மனம் எப்பொழுதும் இளைத்ததில்லை. குளிர்காலத்தில்கூட அந்த அம்மையார் காலையில் ஐந்து மணிக்கே எழுந்திருக்கத் தவறுவதில்லை. காலையில் கடுங்குளிரில் படுக்கையிலிருந்து எழுவது மட்டுமோ? பகலில் கடு வெயிலிலும் கலங்காது நின்று நாட்டுத் தொண்டு செய்வார். மெல்லிய இயல்பு வாய்ந்த அவர் கடுமையான தொண்டுகள் செய்தார்! கடவுளுக்கு அது பொறுக்கவில்லை போலும்! அவருக்கு அடிக்கடி உடல் நலங் குன்றி வந்தது. 1934-ஆம் ஆண்டு முதல் அவரது உடல் மெலியத் தொடங்கியது. 1936-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவர் இவ்வுலகைவிட்டு மறைந்தார். அவரது நினைவுக்கு அடையாளமாக இன்று அவரது அருமை மகள் இந்திரா நேரு விளங்குகின்ருர். ஜவஹர்லால் தமது அன்பிற்குரிய மனைவியின் பிரிவை ஆற்றியிருப்

பது பெரு வியப்பாகும். நாட்டுத் தொண்டில் ஈடு பட்டவர்கள் மக்களையும், மனைவியையும், உறவினரையும் நினைக்க முடியுமோ?

மோதிலால் நேருவின் இரு கண்கள் போன்ற இரண்டு பெண்களும் இன்று சிறிய பெண்களின் திலகங்களாக விளங்குகின்றனர். மூத்த மகளாகிய ஸ்வரூப் இன்று விஜயலக்ஷ்மி பண்டிட் என்ற பெயருடன் விளங்குகின்றார். அவரே இந்தியாவில் முதன் முதல் மந்திரிப் பதவியையடைந்த அம்மையார் ஆவார். இன்று அவர் செய்யும் நாட்டுத் தொண்டிற்கு அளவில்லை. ரஷ்யாவிற்கும், இந்தியாவிற்கும் நல்லுறவை வளர்ப்பதற்கு, அவர் பாடுபட்டார். இந்தியாவின் தூதராக அவர் அமெரிக்காவில் இப்பொழுது இருக்கின்றார். மோதிலால் நேருவின் இளைய மகளாகிய கிருஷ்ணா, ஹதீசிங் என்பவரை மணந்து, தம் கணவருடன் சேர்ந்து தேசத்தொண்டு செய்கின்றார்.

மோதிலால் நேருவின் குடும்பத்தினர் எல்லோரையும் பற்றி விரிவாக எழுதுவது எளிதன்று. மோதிலாலின் மக்கள் இன்று நமக்குச் செய்யும் தொண்டுகள் கணக்கில் அடங்கா. அவர்கள் யாவரும் சொல்வன்மையும், எழுத்து வன்மையும், செயல் வன்மையும் பெற்று விளங்குகின்றனர். அவர்கள் நெடுங்காலம் வாழ்க என்று நாம் இறைவனை வணங்குவோமாக. வாழ்க நேருவின் குடும்பம்!

பயிற்சி

1. 'நேரு' என்ற குடும்பப் பெயர் எவ்வாறு வந்தது?

2. ஆனந்த பவனம் எத்தகைய இடத்தில் அமைந்திருந்தது?

3. 'கும்பமேளா' என்ற திருவிழாவைப் பற்றி எட்டு வரிகளில் குறிப்பு வரைக.

4. மோதிலால் நேருவின் தொண்டுகளைப் பத்து வரிகளில் வரைக.

5. மோதிலால் சிறைக்குச் செல்லும்பொழுது தம் நண்பர்கட்கு விடுத்த செய்தி யாது?

6. மோதிலால் நேரு இறந்தவுடன் கூடிய பெருங் கூட்டத்தில் காந்தியடிகள் கூறியவை யாவை?

7. மோதிலால் பொருளைப் பொருட்படுத்துவதில்லை என்பதற்கு ஒரு உதாரணம் காட்டுக.

8. ஜவஹர்லால் நேருவைப் பற்றி பத்து வரிகளில் சிறு குறிப்பு வரைக.

II. சித்த ரஞ்சன தாஸ்

1. கல்வியும் தொழிலும்

பல சான்றோர்களைத் தோற்றுவித்த பெருமை வங்க மாகாணத்திற்கு உரியது. புலவர்கள், தேசத் தொண்டர்கள், விஞ்ஞான அறிஞர்கள், வீரர்கள் ஆகிய பலர் அங்குத் தோன்றினர். உலகம் புகழும் கவிஞராகிய தாகூர், தேசத் தொண்டையே தமது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்ட வீரராகிய நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் போன்ற அரும் பெரு மக்கள் அவ்விடத்தைச் சேர்ந்தவர்களேயாவர். அத் தகைய வங்க மாகாணத்தின் தலைநகரமாகிய கல்கத் தாவில் 1870-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் நாள் சித்த ரஞ்சன தாஸ் தோன்றினார். பூபன் மோகன் தாஸ் என்னும் பெரியாரும், நிஸ்தாரிணி தேவி அம்மையாரும் செய்த தவப் பயனாய் அவர்களுக்கு மூத்த மைந்தராக தாஸ் பிறந்தார். தாஸின் தந்தை யார் பத்திரிகை ஆசிரியர் என்றும், கவிஞர் என்றும் சிறப்புப் பெற்றவர்.

தாஸ், இளமையில் லண்டன் மிஷனரி சங்கப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றார். 1886-ஆம் ஆண்டு மெட்ரிக்குலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார்; 1890-ஆம் ஆண்டு பி. ஏ. பட்டதாரி ஆனார். இளமை யிலேயே அவர் வாதம் செய்வதில் மிகவும் வல்லவராக இருந்தார். அதற்கேற்ப அவர் இங்கி லாந்து சென்று வழக்கறிஞர் தொழிலை நடத்து வதற்கேற்ற தகுதியைப் பெற்றார். அவரது கல்வி ஒருவாறு முடிந்தவுடன் அவர் தமது வாழ்க்கையை

வழக்கறிஞராகத் தொடங்கினர். வாசந்திதேவி என்னும் அம்மையார் அவருடைய வாழ்க்கைத் துணைவியானர்.

சித்த ரஞ்சன தாஸ் தொடக்கத்தில் தம் தொழிலில் அதிக வெற்றியைப் பெறவில்லை. அவரது குடும்பத்தில் கடன் மிகுதியாக இருந்தது. தாஸின் தந்தையார் பெரும்பொருளைக் கடன்பட்டார். தந்தையும் மைந்தரும் கடனைத் திருப்பிக்கொடுக்க முயன்றும் முடியவில்லை. அதன் பயனாக வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வழியில்லை என்று அரசாங்கத்தினிடம் அவர்கள் ஒப்புக்கொள்ளவும் நேரிட்டது. அதுபற்றி தாஸ் வருந்தவில்லை. கடன்காரர்களின் தொல்லையிலிருந்து சிறிது ஓய்வு பெறவே அவர் அவ்வாறு ஒப்புக்கொண்டார். தமக்குத் தொழிலில் வருவாய் வந்து நல்லகாலம் தொடங்கியவுடன், அக்கடன்களை யெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்பதே அவரது கருத்து. அவ்வாறே திருமகளின் அருள் கிடைத்தவுடன் அவர் தமது தந்தைபட்ட கடனையெல்லாம் தீர்த்துவிட்டார்; அச்செய்தியை அரசாங்கத்தாருக்கும் தெரிவித்தார். தமக்குப் பொருள் திரும்பவராது என்றே அக்கடன்காரர்கள் நினைத்திருந்தனர். எதிர்பாராத விதத்தில் தாஸ் கடன்களைத் தீர்த்தவுடன் கடன் கொடுத்தவர்கள் அவரை மிகவும் புகழ்ந்தனர். உலகம் அவரைப் போற்றியது; அவரது நேர்மையை வியந்தது. வங்க மாகாணத்தினர் அவரது உயர்வை உணரத் தொடங்கினர்.

நாளடைவில் வழக்கறிஞர் தொழிலில் தாஸுக்குப் பெரும்புகழ் கிடைத்தது. அவர் தம்மிடம்

வரும் வழக்குகளை நன்கு கேட்டுத் தெரிந்து கொள் வார். சட்ட அறிவு அவரிடம் மிகுதியாக அமைந் திருந்தது. வழக்குகளை எவ்வாறு வாதிக்கவேண்டும் என்று அவர் நன்கு சிந்திப்பார். நீதி மன்றத்தில் அவற்றை எல்லோரும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் தெளிவாக எடுத்துரைப்பார். அவரது சிறந்த உரையைக் கேட்ட எதிர்க்கட்சி வழக்கறிஞர்களே தமது வழக்குகள் தோற்று விட்டன என்று ஒப்புக் கொள்வார்கள்.

அரவிந்த கோஷ் என்பவரைப் பற்றிய வழக்கில் தாஸ் நன்ருக வாதம் செய்தார். அரவிந்த கோஷ் 'வந்தே மாதரம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர். வங்க நாடு பிரிக்கப்பட்டதிலிருந்தே அந்நாட்டின் பல இடங்களில் கலகங்களும், குழப்பங்களும் தோன்றின. அரவிந்த கோஷை அரசாங்கம் எதிரியாகக் கருதியது; அவர்மீது வழக்கும் தொடுத்தது. அந்த வழக்கில் கோஷின் பக்கத்தில் இருந்து தாஸ் வாதம் செய்தார். அதன் பயனுக நமது தாஸுக் குப் புகழ் உண்டாகத் தொடங்கியது.

வழக்கறிஞர் தொழிலில் பெரும் புகழை அடைய தாஸுக்கு மற்ருெரு சந்தர்ப்பம் கிடைத் தது. கல்கத்தாவின் அருகில் முஸபர்பூர் என்னும் ஒரு ஊர் உள்ளது. அவ்வூரில் சில வங்க இளைஞர் கள் அரசாங்கத்திற்கு எதிராக வெடிகுண்டுகளை உபயோகித்தனர் என்று அரசாங்கம் அந்த இளை ஞர்களின்மேல் வழக்குத் தொடுத்தது. அதற்கேற் பச் சில வெடிகுண்டுத் தொழிற்சாலைகளும் போலீ ஸால் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்விளைஞர்கள் யாவரும் அரசாங்கத்திற்கு விரோதமாய்ச் சதி

செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டனர். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட இளைஞர்களைக் காப்பாற்றவே தாஸ் முன்வந்தார். இவ்வழக்கு நெடுங்காலம் நடந்தது. தாஸ் இதன் பொருட்டுப் பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லை. இரவும், பகலும் அவர் இவ்வழக்கின் நுட்பங்களை ஆராய்ந்தார். அப்பொழுது அவர் செய்த குறுக்கு விசாரணைகளை வழக்கறிஞர்களே மிகவும் போற்றுகின்றனர். தாஸ் இவ்வழக்கினை மேற்கொண்டது பொருள் பெறும் நோக்கத்துடன் அன்று. அவர் சிறிது கூடப் பொருளைப் பெறவே யில்லை. தம் நாட்டு இளைஞர்களைத் தப்புவிக்க வேண்டும் என்பது ஒன்றே அவரது நோக்கமாக இருந்தது. இவ்வழக்கில் அவர் ஈடுபட்டது முதல் அவரது புகழ் இந்தியா முழுவதும் பரவியது. கணக்கற்ற வழக்குகள் அவரைத் தேடிவரலாயின. கொலை, களவு, சதி போன்ற வழக்குகளையும், ஏனைய வழக்குகளையும் நடத்துவதில் வல்லவர் என்று அவர் எல்லோராலும் புகழப்பட்டார்.

தாஸின் மனத்தில் தேசப்பற்று மிகுதியாக இருந்தது. தம் நாட்டு மக்களிடம் அவர் மிக அன்பு கொண்டார்; நாட்டிற்கு உழைப்பதே தமது கடன் என்று முடிவு செய்தார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியபொழுது தாஸ் முழு மனத்துடன் அதில் கலந்து கொண்டார்; தமது வழக்கறிஞர் தொழிலை விடுத்தார். அதனால் வருவாய் நின்று விடுமே என்று அவர் கருதவில்லை. அவர் செல்வத்தை எப்பொழுதும் பொருட்படுத்துவதே இல்லை. வருவாய் இல்லாமல் போனவுடன் அவர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அது

மட்டுமோ? தாம் சேர்த்த பொருள் முழுவதையும் அவர் நாட்டு மக்களுடைய நலத்தின் பொருட்டு நன் கொடையாக அளித்துவிட்டார். தாஸ் தம் தொழிலை விடுத்தது இடைவிடாமல் தேசத்தொண்டு புரியவே ஆகும். அவர் செய்த தொண்டு அவருக்கு அழியாத புகழை அளித்தது. இந்தியச் சரித்திரத்தில் அவரது பெயர் என்றும் அழியாது. அவர் செய்த தேசத்தொண்டை நாம் அடுத்த பகுதியில் அறிவோம்.

2. தேசத் தொண்டு

இந்தியாவின் தவப்பயனே தாஸைத் தேசத் தொண்டில் செலுத்தியது. 'வந்தே மாதரம்,' 'நியூ இந்தியா' முதலிய பத்திரிகைகளின் வாயிலாக அவர் இந்தியர்களை நன்கு தூண்டிவிட்டார். எல்லோருக்கும் வழிகாட்டியாக அவர் தேசத்தொண்டு செய்வதில் முனைந்து நின்றார். வந்தே மாதரப் பத்திரிகையினது ஆசிரியரின் மீது தொடுக்கப் பட்ட வழக்கிலும், அதன் பின்பு நடந்த பெரிய வெடிகுண்டு வழக்கிலும் அவர் பொருளை எதிர் பாராமல் வழக்காடிய செய்தி அவரது தேசப் பற்றையும், இந்தியர்களிடம் கொண்ட அன்பையும் எல்லோரும் அறியும்படி செய்தது. சிறந்த தேச பக்தர் என்று எல்லோராலும் அவர் புகழப்பட்டார்.

வங்கநாட்டு மக்கள் தேசப்பற்று மிக வாய்ந்த வர்கள். அந்நியருடைய ஆட்சியை அவர்கள் மிக வெறுத்தனர். வங்கப் பிரிவினையிலிருந்தே அவர் களுடைய உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது. அவ்



சித்த ரஞ்சன தாஸ்

வாறு குமுறிய மக்களின் உளளத்தை தாஸ் தூண்டி விட்டார். ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகள் வழக்கறிஞர் தொழில் செய்தபிறகு தான் அவர் தேசத்தொண்டு செய்யத் தம் வாழ் நாள் முழுவதையும் செலவிட்டார். ஆனால் அவர் இந்திய தேசீய காங்கிரஸில் அங்கத்தினராகத் தமது முப்பத்தாறுவது வயதிலேயே சேர்ந்து விட்டார். 1917-ஆம் ஆண்டு நடந்த வங்க மாகாண காங்கிரஸ் மகாநாட்டில் அவர் தலைமைப் பதவி யைப் பெற்றார். அது முதல் அவர் தம் சொந்த வேலை களைச் சிறிதும் கவனியாமல் நாட்டின் நலத்திற் காகவே இறக்கும் வரையில் உழைத்தார்.

நாட்டுத் தொண்டை நன்கு செய்யும் பொருட்டே தாஸ் தம் வழக்கறிஞர் தொழிலை முதி லில் விடுத்தார். அவர் கல்கத்தா காங்கிரஸ் மகா நாட்டில் செய்த சொற்பொழிவு மக்களின் உள்ளத் தைத் தூண்டிவிட்டது. மக்கள் தமது பழங்காலப் பெருமைகளை நன்கு உணர்ந்தனர்; பிறர்க்கு அடி மைப்பட்டு வாழ்வதன் இழிவை அறிந்தனர். சுதந் திர உணர்ச்சி எல்லோருடைய உள்ளத்திலும் பொங்கியது. மக்கள் விழித்து எழுந்தனர். நாட் டின் பொருட்டு உயிரைக் கொடுக்கவும் அவர்கள் தயாராக நின்றனர்.

1920-ஆம் ஆண்டில் காந்தியடிகள் ஒத்துழை யாமை இயக்கத்தைத் தொடங்கினார். இதைப்பற்றி மோதிலால் நேருவின் வரலாற்றிலும் குறிப்பிட்டுள் ளோம். அமிர்தசரஸ் என்ற இடத்தில் படுகொலை நிகழ்ந்ததையும், பஞ்சாபில் அரசாங்கத்தின் கடு மையான அடக்கு முறையையும் கேள்வியுற்ற

தாஸின் மனம் அரசாங்கத்தினிடம் வெறுப்புக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கவே, தீவிரமாகத் தொண்டுபுரிய தாஸுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. முதலில் தாஸ் காந்தியடிகளுடைய கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. அது பற்றிக் காந்தியடிகளுக்கும், தாஸுக்கும் பல வாதங்கள் நிகழ்ந்தன. அவற்றின் முடிவில் காந்தியடிகளே வெற்றிபெற்ருர். ஒத்துழையாமை இயக்கத்தில் தாஸ் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ளுமாறு செய்த பெருமை காந்தியடிகளையே சாரும்.

ஒத்துழையாமை இயக்கத்தின் நோக்கங்கள் பலவாம். 'மாகாணச் சட்ட சபையிலும், மத்திய சட்ட சபையிலும் உள்ள அங்கத்தினர்கள் தம் பதவிகளை விட்டொழிக்கவேண்டும். தேர்தல்களில் போட்டியிடக்கூடாது. அரசாங்க ஊழியர்கள் தம் வேலைகளை விடுக்கவேண்டும். வழக்கறிஞர்கள் வழக்குகளை நடத்தக்கூடாது. மாணவர்கள் அரசாங்கக் கல்விச்சாலைகளுக்குப் போகக்கூடாது' என்பனவே ஒத்துழையாமை இயக்கத்தின் நோக்கங்களாகும். அப்பொழுதுதான் தாஸ் தமது வழக்கறிஞர் தொழிலை விடுத்தார்; எளிய வாழ்க்கையை மேற்கொண்டு எல்லோருக்கும் வழிகாட்டியாக் விளங்கினர்.

அக்காலத்தில் தாஸ் ஒரு பெரிய தொண்டர் படையைச் சேர்த்தார். நூற்றுக்கணக்கான ஆடவரும் பெண்டிரும், மிக மகிழ்ச்சியுடன் அத்தொண்டர் படையில் சேர்ந்தனர். பல இடங்களில் அவர் மறியல் நடத்தினர். அரசாங்க உத்தியோக சாலை

கள், பள்ளிக்கூடங்கள், நீதிமன்றங்கள் முதலியவற்றிற்கு எதிரே மறியல்கள் நடந்தன. அயல் நாட்டுப் பொருள்கள் விற்கப்பட்ட கடைகளின் எதிரிலும் மறியல் நடந்தது. நாளடைவில் அத்தொண்டர் படை வலுத்துவிட்டது.

தாஸ் போன்ற பலரது செயல்களைக் கண்ட அரசாங்கம் நடுங்கியது. எனினும் அந்த இயக்கத்தை எப்படியேனும் ஒழிக்க அது பாடுபட்டது. பல இடங்களில் அடக்குமுறைச் சட்டங்கள் போடப்பட்டன. ஊழியர்கள் பயமுறுத்தப் பட்டனர். தொண்டர்களுக்குச் சிறைத்தண்டனை கிடைக்கும் என்று அரசாங்கம் கூறியது. பலருக்குச் சிறைத் தண்டனையும் கிடைத்தது. தாஸ் ஆறு மாதச் சிறைத் தண்டனையைப் பெற்ருர். அவர் மட்டுமோ? அவரது மனைவி, மைந்தர் முதலியவர்களும் சிறை புகுந்தனர். பலர் இடைவிடாது சிறைக்குச் சென்ற வண்ணமே இருந்தனர். சிறைச்சாலைகளில் சிறிது கூட இடமில்லை. கணக்கில்லாத மக்கள் எவ்வாறு சிறைச்சாலையில் இருக்க முடியும்?

தாஸ் சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடன் நாட்டின் நிலைமையைக் கண்டார். அவர் நெஞ்சம் பதறியது. பலர் சிறை சென்றதைக் கேள்வியுற்று அவரது மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. அதன் பயனுக அவர் ஒரு முடிவுக்கு வந்தார். சட்ட சபைகளுக்கு வெளியில் இருந்து அரசாங்கத்தை எதிர்ப்பதால் பல இன்னல்கள் விளையும் என்று அவர் கருதினுர். சட்ட சபைகளில் இருந்துகொண்டே அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும்

முட்டுக்கட்டை போடுவது பலன் தரும் என்பது அவர் நினைவு. அதன் பொருட்டு அவர் கடுமையாக உழைத்தார். அவரது கொள்கையைப் பலர் ஆதரித்தனர். அவர்களுள் முதன்மையானவர் பண்டித மோதிலால் நேரு ஆவார். காந்தியடிகள் முதலியோர் தாஸின் கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை. தாஸ் அதனால் தம் கருத்தை அகற்றவில்லை; தமது நண்பர்களுடன் பல திட்டங்களைப் போட்டார். அவற்றின் விளைவாக 'சுவராஜ் கட்சி' தோன்றியது. தாஸ் அக்கட்சியின் தலைவரானார். மோதிலால் நேரு அக்கட்சியின் செயலாளர் ஆனார். தமிழ் நாட்டில் திருவாளர் சீநிவாச ஐயங்கார் போன்ற பெரியவர்கள் இக்கட்சியை ஆதரித்தனர்.

தாஸின் கொள்கைக்கு வங்க மக்கள் முழு மனத்துடன் ஆதரவு அளித்தனர். வங்காளத்தில் சுவராஜ் கட்சி சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தது. சட்ட சபைத் தேர்தல்களில் சுவராஜ் கட்சிக்குப் பெரிய வெற்றி கிடைத்தது. தாஸ் வங்கச் சட்ட சபையில் பெருமதிப்பு வாய்ந்த அங்கத்தினர் ஆனார். சட்ட சபையிலிருந்துகொண்டே அரசாங்கத்திற்கு எதிராக நடப்பதல்லவா அவரது கருத்து. அதற்கேற்ப அவர் மந்திரி சபையை அமைக்க மறுத்தார்; வரவு செலவு திட்டங்களைத் தாக்கினார்; அரசாங்கத்தின் காரியங்களுக்கு எவ்வளவு இடையூறுகள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்தார். அரசாங்கம் அவருக்கு நடுங்கியது என்று கூறலாம். பிறகு நகர சபைத் தேர்தலிலும் சுவராஜ் கட்சியே வெற்றி பெற்றது. தாஸ் இரு முறை கல்கத்தா நகர சபைத் தலைவராக இருந்தார்.

பதவியில் இருந்த காலத்தில் அவர் செய்த சீர்திருத்தங்கள் கணக்கில் அடங்கா.

சுவராஜ் கட்சி வங்காளத்தில் பெரு வலிமையைப் பெற்றிருந்தது. தாஸ் சொல்லிய சொல்லுக்கு எதிராக யாரும் நடக்கத் துணியவில்லை. அவரைப் பின்பற்றினால் நாடு விடுதலை பெறும் என்பதை வங்க மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர். அச்சமயத்தில் வங்காளத்தில் பல இளைஞர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்களைக் கலகக்காரர்கள் என்று அரசாங்கம் கருதியது. அதற்குக் காரணம் கோபிநாத் ஷா என்பவரால் ஒரு ஆங்கிலர் தவறுதலாகக் கொலை செய்யப்பட்டதே ஆகும். ஆங்கிலர் ஒருவர் கொலை செய்யப்பட்டதற்காக நூற்றுக்கணக்கான வங்க இளைஞர்களின் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள அரசாங்கம் முற்பட்டது. அதை வங்க மக்கள் பலமாகக் கண்டித்தனர். அவ்வாறு கண்டித்தவர்களின் முன்னணியில் நின்றவர் சித்த ரஞ்சன தாஸ் என்று சொல்லவும் வேண்டுமோ? அவர் தமது சொற்பொழிவில் 'கலகக்காரர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் உண்மையில் கலகம் செய்யவில்லை. அவர்களிடம் கெட்ட எண்ணம் எதுவும் இல்லை. நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். நாட்டுப்பற்று மிகுதியாலேயே அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டனர். அவர்களை நான் முழு மனத்துடன் ஆதரிக்கின்றேன்' என்றார்.

ஆனால் கலகம் செய்வதை தாஸ் ஆதரித்தார் என்று சொல்லக்கூடாது. அமைதியான முறையில் அரசாங்கத்துடன் போர் செய்வதையே தாஸ்

விரும்பினார். நாடு விடுதலை அடைவதற்குக் கொலைகள் நடக்கவேண்டும் என்று அவர் விரும்பவில்லை. அரசாங்கத்தை வாய்ப்பேச்சினால் வெல்லவேண்டும் என்பதே அவரது கருத்து. தமது கருத்தை அவர் பல சொற்பொழிவுகளின் வாயிலாக வெளிப்படுத்தினார்; பத்திரிகைகளின் வாயிலாக மக்களுக்கு உணர்த்தினார்; அரசாங்கத்திற்கும் அதை ஒரு கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்தார். அக்கடிதத்தில் "மக்களின் சுதந்திர உணர்ச்சியை அரசாங்கம் தவறுதலாகக் கருதக்கூடாது. கலகம் எவ்வாறு நடந்தது என்பதை அரசாங்கம் தீர விசாரிக்கவேண்டும். அதைப்போன்ற கலகம் இனி நடவாதிருக்கும் விதத்தில் அரசாங்கம் நடந்து கொள்ளவேண்டும். மக்களின் தியாக உணர்ச்சியை அரசாங்கம் பாராட்டவேண்டுமே ஒழிய அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவோ, அவர்களை அடக்கவோ முயலக்கூடாது. மக்கள் விரும்பும் விதத்தில் அரசாட்சி நடத்துவதே அறிவுள்ள தன்மையாகும்," என்பன போன்ற கருத்துக்கள் அடங்கியிருந்தன. தமது கொள்கைகளுக்கு இணங்கினால் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவும் அவர் தயாராக இருந்தார். ஆனால் அந்தோ! அவர் தமது கருத்துக்களின்படி நடப்பதற்குக் கடவுள் விரும்பவில்லை போலும்! 1925-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-வது நாள் அவரது உயிரைக் காலன் கவர்ந்து சென்றான். அவர் இறந்தது டார்ஜிலிங் என்னும் கோடை கால இருப்பிடத்திலாகும். எனவே அங்கிருந்து அவரது உடல் கல்கத்தாவிற்குக் கொண்டுவரப்பட்டது. இறுதிச் சடங்கும் நிறை

வேறியது. அப்பொழுது கூடிய கூட்டத்தைப் போல் கல்கத்தாவில் எப்பொழுதும் கூடியதில்லை. ஏறக்குறைய மூன்று லட்சம் மக்கள் தம் தலைவருக்கு இறுதி மரியாதை செய்ய ஒன்று கூடினர். அவர்களின் முன்னணியில் நின்றவர் காந்தியடிகளே ஆவார்.

3. சிறப்பியல்புகள்

சித்த ரஞ்சன தாஸ் சிறந்த தேச பக்தர்; உயர்ந்த கல்வியும் நுட்பமான அறிவும் வாய்ந்தவர்; பேச்சில் மட்டுமன்றிச் செயலிலும் வீரராக இருந்தார்; வங்க மக்கள் எல்லோரும் ஒரே மனத்துடன் அவரைத் தம் தலைவராக ஒப்புக்கொண்டனர். இந்தியா முழுவதிலும் அவருக்குப் பெருமதிப்பு இருந்தது. காந்தியடிகளுக்கு எதிரான சில கருத்துக்கள் அவரிடம் இருந்ததற்காக அவரை யாரும் வெறுக்கவில்லை. அவரது தியாகத்தையும், தொண்டையும் எல்லோரும் புகழ்ந்தனர். பெரித்பூர் மாகாண மகாநாட்டில் அவர் கூறிய யோசனைகள் மிகச் சிறந்தன என்று எல்லோரும் ஒப்புக்கொண்டனர். அந்த யோசனைகள் இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகின்றன.

தாஸினுடைய நாட்டுத் தொண்டுகளை நாம் விரிவாக அறிந்தோம். இவர் இங்கிலாந்தில் சட்டக் கல்வி பயின்ற காலத்திலேயே பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். பொருளை எதிர்பாராமல் அவர் பல வழக்குகளை நடத்தினர் என்று முன்பு குறிப்பிட்டோம். வங்க இளைஞர்களின் மேல் அரசாங்கம் குற்றம் சாட்டியபொழுது அவர் வழக்கை நடத்திய

விதத்தை நம்மால் புகழமுடியாது. எவ்வளவு சாட்சிகள்! எத்துணை அரிய குறுக்கு விசாரணைகள்! தாஸ் அந்த வழக்கின்பொருட்டுப் பட்டபாடு இவ்வளவு என்று சொல்லமுடியாது. அவர் கஷ்டப்பட்டது ஏன்? பொருளைச் சேர்க்கவேண்டும் என்றோ? புகழ் பெறலாம் என்றோ? அல்ல அல்ல. வங்க இளைஞர்களைக் காப்பாற்றும் பொருட்டுத்தான். நாட்டு மக்களுடைய வீரவுணர்ச்சியைத் தட்டி எழுப்பும் பொருட்டுத்தான். பெரும்பொருள் வருவாயை அளித்த தம் தொழிலை விடுத்த ஒன்றே அவரது நாட்டுப்பற்றை நன்கு விளக்கும். அவருடைய வாழ்க்கை பலரைத் தேசத்தொண்டில் ஈடுபடுமாறு செய்தது.

காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தின்பொழுது தாஸ் செய்த செயல்களை நம்மால் எக்காலத்திலும் மறக்க முடியாது. அவரது வீரப் பேச்சால் வங்க இளைஞர்கள் வீரம் பெற்று எழுந்தனர். தாஸ் தொடங்கிய காங்கிரஸ் தொண்டர் படையில் எவ்வளவு இளைஞர்கள் சேர்ந்தனர்! அவர்கள் எவ்வளவு கட்டுப்பாடாக மறியல்களைச் செய்தனர்! அவர்களுக்குள் இருந்த ஒற்றுமையை யாம் இத்தகையதென்று கூறமுடியுமோ? இவ்வளவுக்கும் காரணமாக இருந்தவர் தாஸே ஆவார். தாஸ் சிறை புகுந்தார்; துன்பமுற்றார்; மனைவியையும், மகனையும் சிறை புகுமாறு செய்தார். இவ்வளவும் எதன் பொருட்டு? நாட்டின் விடுதலைக்காகவே. அவரது முயற்சியின் பலனே இன்று நமக்குக் கிட்டியது. நம் நாடு இன்று விடுதலை பெற்று விட்டது. சுதந்திரம் நமக்கு வந்து விட்டது. இதற்கு

முன்னணியில் நின்று இடைவிடாது உழைத்த பெரியோர்களில் சிறந்தவர் சித்த ரஞ்சன தாஸே ஆவார்.

தாஸ் செய்த சீர்திருத்தங்களுக்கு அளவில்லே. இந்துக்களேயும் முஸ்லிம்களேயும் ஒற்றுமைப்படுத்த அவர் பெரும்பாடு பட்டார். வங்க முஸ்லிம்களே அவரைத் தம் தலேவராக முழு மனத்துடன் ஒப்புக் கொண்டனர். இந்தியாவில் வாழும் மக்கள் யாரா யிருந்தால் என்ன? எம்மதத்தைச் சேர்ந்தவராளுல் என்ன? எக்கொள்கையைப் பின்பற்றியவராளுல் என்ன? இந்தியாவில் வாழும் வரையில் யாவரும் இந்தியர்களே. சாதி சமய வேற்றுமைகளே நாட்டைக் குலேக்கும். ஒற்றுமையைக் கெடுக்கும். இக் கருத்துக்கள் தாஸின் உள்ளத்தில் புதைந்து கிடந்தன. பலவித வேற்றுமைகளே மறந்து மக்கள் ஒத்துழைக்குமாறு செய்த பெருமையில் பெரும் பகுதி தாஸுக்கே உரியது.

தொழிலாளர்கட்கு அவர் பல நன்மைகளேச் செய்தார். செல்வர்களும் நடுத்தர மக்களும் மட்டும் நன்மைகளே அடைவதில் பயனில்லே என்பது தாஸின் கருத்து. தொழிலாளர்களின் நிலே உயர்ந் தால்தான் இந்தியா முன்னேற்றமடையும் என்பது அவரது கொள்கை. இதை அவர் பல முறைகளில் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். 'எல்லாவிதமான மக்களின் பிரதிநிதிகளும் கூடியே அரசாங்கத்தை நடத்த வேண்டும்' என்று கூறினர். செல்வரும் நடுத்தர மக்களும் தொழிலாளர்களுடைய உழைப் பின் பயனேப்பெற்று இன்பமாக வாழ்வதில் அவருக்கு விருப்பம் இல்லே. இக்கருத்தை அவர்

1922-ஆம் ஆண்டு கயாவில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் தெளிவாக எடுத்துக் கூறினர்.

தாஸ் சொல்வன்மையை மிகுதியாகப் பெற்றிருந்தார். "நா அசைய நாடு அசையும்" என்பது பழமொழி. அவ்வாறு ஒரு நாட்டைத் தம் சொற்படி நடக்குமாறு செய்யவேண்டுமானல் ஒரு தலைவர் சொல்வன்மையை நன்ருகப் பெற்றிருக்கவேண்டும். ஆனல் தியாகமும், தொண்டும் அத்தலைவரிடம் இருக்கவேண்டும். இவை யாவும் தாஸினிடம் நன்கு பொருந்தியிருந்தன. கண்ணை மூடிக்கொண்டு கடலில் விழவேண்டும் என்று தாஸ் கூறினலும் வங்க மக்கள் மறுத்திருக்க மாட்டார்கள் என்று நாம் துணிந்து கூறலாம். இத்தகைய மதிப்பு தாஸுக்கு எவ்வாறு வந்தது? இதற்குக் காரணங்கள் அவரது தியாகமும், தொண்டும், சொல்வன்மையுமே ஆகும்.

வழக்கறிஞர் தொழிலை விடுத்தவுடன் தாஸ் எளிய வாழ்க்கையைப் பின்பற்றினர். எளிய வாழ்க்கையிலிருந்து ஆடம்பர வாழ்க்கையைப் பின்பற்றுவது எளிது. அதுவே உலகத்தின் இயற்கையும் ஆகும். ஆனல் தாஸ் பிறர்க்கு அருமையான ஒரு காரியத்தை எளிதாகச் செய்தார். தேசத் தொண்டில் ஈடுபட்டவுடன் அவர் பல இன்பங்களை வெறுத்துவிட்டார். உடல்நலத்தைப் பொருட்படுத்தவே இல்லை. செல்வத்தைப் பொருட்படுத்தினரோ? அதுவும் இல்லை. செல்வத்தைத் துரும்பாக நினைத்தார். தமது செல்வம் முழுவதையும்—ஏன், உயிரைக்கூட—நாட்டு மக்களின் நலத்திற்காகத் தியாகம் செய்தார். அவர் தமது செல்வத்தைக்

கொண்டு கல்விச்சாலை ஒன்றையும், பெண்களின் மருத்துவச்சாலை ஒன்றையும் தொடங்குமாறு செய்தார். இந்திய மக்களிடம் நன்றி மறவாத தன்மை நன்ருக அமைந்துள்ளது. அதற்கு அடையாளமாக அவர்கள் தாஸுக்கு ஒரு நல்ல சிறப்புப் பெயரை அளித்தனர். அது மிகப் பொருத்தமான பெயராகும். அதுதான் 'தேச பந்து' என்பது. எவ்வளவு பொருத்தமான, அழகான சிறப்புப் பெயர்! இப்பெயராலேயே தாஸ் இன்றும் குறிக்கப்படுகின்ருர். அப்பெயர் அவருக்கே பொருந்தும்.

ஒத்துழையாமை இயக்கம் தீவிரமாக நடந்தபொழுது மாணவர்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லக்கூடாது என்று தாஸ் கூறினுர். அவ்வாறே பல மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் இருந்தனர். அவர்கள் கல்வி கற்கும் பொருட்டுப் பல கல்விச்சாலைகளைத் தொடங்குதல் இன்றியமையாதது என்று தாஸ் கருதினுர். அவருடைய கருத்தின்படியே பல புதிய கல்விச்சாலைகள் தொடங்கப்பட்டன. டாக்காவில் ஒரு தேசீயப் பல்கலைக்கழகத்தை நமது தேசபந்து தாஸே தொடங்கினுர். பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குச் சிறந்த தேசப்பற்றை ஊட்ட வேண்டும் என்பதே தாஸின் நோக்கமாகும்.

தேசபந்து தாஸ் ஒரு பெருங் கவிஞராவார். அவருடைய பிற்காலத்துக் கவிகள் மக்களுக்குச் சமயப்பற்றையும், கடவுட் பக்தியையும் விளைவிப்பனவாக உள்ளன. வழக்குகளை நடத்துவதிலும், நாட்டுத் தொண்டிலும், கட்டுரைகள் எழுதுவதிலும் அவர் தமது வாழ்நாளைச் செலவிடாமல் கவிகளையே

இயற்றியிருந்தால் அவர் தாகூர் போன்ற ஒரு பெருங் கவிஞர் ஆகியிருப்பார் என்பது திண்ணம். கவிகள் பாடுவதற்கு அமைதி வேண்டும். மனம் பல விடங்களில் செல்லக்கூடாது. உள்ளம் கனிந்த பொழுதுதான் சிறந்த பாடல்கள் வெளிவரும். ஆனால் தாஸுக்கு அமைதி ஏது? அவர் மனத்திற்கு ஓய்வு ஏது? எனவே தாஸ் தமது பெரும் புலமைத் திறத்தை உலகத்திற்கு நன்றாகக் காட்ட முடியவில்லை. கவிகள் இயற்றுவதைக் காட்டிலும் நாட்டுத் தொண்டே இந்தியாவிற்கு உடனடியாக வேண்டப்படுவது என்பதை அவர் உணர்ந்தார். அதனாலேயே அவர் தம் மனத்தைக் கவிகள் இயற்றுவதில் அதிகமாகச் செலுத்தவில்லை. அதுவும் நமக்கு ஒரு விதத்தில் நல்லதாகப் போயிற்று. அவரது முயற்சினாலேயே பலர் தேசத்தொண்டில் ஈடுபட்டனர். அவ்வாறு ஈடுபட்ட பலரது உழைப்பால் நமக்கு இன்று சுதந்திரம் கிடைத்து விட்டது.

தாஸ் சிறந்த அரசியல் அறிஞர்; சொல்வன்மை வாய்ந்தவர்; வழக்கறிஞர்; செல்வர்; தொண்டர்; பத்திரிகை ஆசிரியர்; புலவர்; பல பெரியார்களின் நட்பைக்கொண்டவர்; நாட்டை நல்வழியில் செலுத்தினார்; நாட்டுக்காகவே தம் பொருளைக் கொடுத்தார்; உடலால் உழைத்தார்; உயிரையும் கொடுத்தார். அத்தகைய ஆன்றோரை, தேசபந்துவை, பிறர்பொருட்டு உயிர் வாழ்ந்த பெருந்தகையாரை நாம் என்றும் மறக்கக்கூடாது. அவரது பெயர் இந்தியா உள்ளவரையில் அழியாது. அவர் இந்தியா விடுதலை பெறும்பொருட்டு உழைத்த

பெரும் வீரர் என்பது நம் மனத்தைவிட்டு எப்பொழுதும் அகலாது. தாஸ் போன்ற பெரியார்கள் தோன்றிய இடம் இந்தியா என்பதை உணரும் பொழுது நமக்கு மிகப் பெருமிதம் உண்டாகின்றது. நாம் அவரைப் போற்றுவோமாக.

பயிற்சி

1. தேசபந்து தாஸ் மேற்கொண்டு வாதம் செய்த வழக்குகளில் மூன்றைக் குறிப்பிடுக.

2. ஒத்துழையாமை இயக்கம் நடந்த காலத்தில் தாஸ் செய்தவற்றைச் சுருக்கி வரைக.

3. 'சுவராஜ் கட்சி'யைப் பற்றி எட்டு வரிகளில் குறிப்பு வரைக.

4. 'பிறர் பொருளை விரும்பாத தன்மை தாஸினிடம் அமைந்திருந்தது'—இதற்கு ஒரு உதாரணம் காட்டுக.

5. 'தாஸின் தேசத் தொண்டு' என்னும் பொருள் பற்றிப் பதினைந்து வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

6. தாஸுக்குக் கிடைத்த சிறப்புப் பெயர் யாது? அப்பெயர் பொருத்தமா? எப்படி?

III. பால கங்காதர திலகர்

1. இளமையும் கல்வியும்

வங்கச் சிங்கமாகிய தாஸைப்பற்றி நாம் அறிந்தோம். இந்தியாவில் தமிழரும், இராச புத்திரரும், மராத்தியரும், சீக்கியரும் சிறந்த வீரத் தன்மைக்குப் பெயர் பெற்றிருந்தனர். மராத்தியர் சென்ற நூற்றாண்டு வரையில் காட்டிய வீரச்செயல்களுக்கு அளவில்லை. அவர்களுள் பெரு வீரராகத் திகழ்ந்த சிவாஜியைப் பற்றி அறியாதவர் இரார். மரத்தியர்களிடம் நாட்டுப் பற்றும், வீரவுணர்ச்சியும் மிகுதியாக இருந்தன. அத்தகைய வீரர்கள் தோன்றிய இடத்தில் பிறந்து, நாட்டுப் பற்றுடன் தொண்டு செய்த பெரியார் பால கங்காதர திலகர் ஆவார். அவரது வாழ்க்கை சுவையுள்ளது. அதனை நாம் அறிந்து பயன்பெறுதல் வேண்டும்.

திலகர் 1856-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபத்துமூன்றும் நாள் இவ்வுலகில் தோன்றினார். அவர் தோன்றிய இடம் இரத்தினகிரி ஆகும். திலகரது குடும்பமே அறிவிற்கும், வீரத்திற்கும் பெயர்பெற்றிருந்தது. அவரது தந்தையாராகிய கங்காதர ராமச்சந்திர திலகர் சிறந்த அறிஞர்; வடமொழியிலும், மராத்தியிலும் வல்லவர்; மிகக் குறைந்த சம்பளத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தார். அவரிடம் சுதந்திர உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் மிகுதியாக இருந்தன. எனவே அத் தன்மைகள் நமது திலகருக்கு இயற்கையிலேயே அமைந்து விட்டன. திலகரின் அன்னையார்

அன்பு, அருள், பக்தி முதலிய குணங்களுக்கு இருப்பிடமானவர். ஆகவே அக்குணங்கள் யாவும் திலகரிடம் குடிகொண்டன. "குலவிச்சை கல்லாமல் பாகம் படும்" என்பது பழமொழி யன்றோ? அதற் கேற்பத் திலகர் தமது பெற்றோர்களின் நற்குணங்களையும், அக் குடும்பத்திற்கே இயற்கையான நாட்டுப் பற்றையும் பெற்று விளங்கினார்.

பால கங்காதர திலகர் இளமையிலேயே வடமொழியை நன்கு கற்றார். அவரது தந்தையே அதற்குக் காரணமானவர் என்று சொல்லலாம். அவர் திலகருக்கு வடமொழியில் ஆர்வத்தை வளர்த்தார். வடமொழிக் கவி ஒன்றைப் புதிதாக மனப்பாடம் செய்தால் அவருக்கு ஒரு காசு பரிசு கிடைக்கும். இவ்வாறு தந்தையார் திலகருக்கு இளமையில் வடமொழியில் ஆசையைப் பெருக்கினார். இதன் பயனாகத் திலகர் வடமொழியில் பேரறிவு பெற்று விளங்கினார். திலகருக்கு மராத்திய மொழியிலும் நல்ல பயிற்சி இருந்தது. அவரது தந்தைக்கு டாக்டர் பண்டர்க்கர் என்னும் வடமொழி அறிஞர் நண்பராக இருந்தார். அவரது தொடர்பும் திலகருடைய வடமொழி அறிவு வளர உதவி செய்தது.

திலகர் பூனாவில் இருந்த ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படித்தார். பள்ளிக்கூடத்தின் கட்டுப்பாடுகளைத் திலகர் விரும்பவில்லை. ஆசிரியர்களுக்குத் திலகரிடம் ஒரு வெறுப்பே இருந்தது. அவருடைய கல்வியறிவைக் கண்டு அவர்கள் வியந்தனர். என்றாலும் ஆசிரியர்கள் கட்டளைப்படி திலகர் நடப்பதில்லை. கற்பலகையில் கணக்கை எழுதிக்கொள்ளு

மாறு ஆசிரியர் கூறினால் அவர் அக் கணக்கை மனத்திலேயே எழுதிக்கொள்வார். மற்றவர்கள் கணக்கை எழுதிக்கொள்வதற்கு முன்னதாகவே அவர் கணக்கின் விடையைக் கூறிவிடுவார். ஒரு முறை கணக்கு ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு கணக்கைப் போட்டார். மாணவர்கள் எல்லோரும் கற்பலகையில் கணக்கினை முறைப்படி செய்திருந் தனர். திலகர் அக்கணக்கின் விடையை மட்டும் கற்பலகையில் எழுதியிருந்தார். அதைக் கண்ட ஆசிரியர், "வழி எங்கே? இக் கணக்கை எப்படிப் போட்டாய்? எங்கே போட்டாய்?" என்று கேட்டார். திலகர் வாய் திறவாமல் தமது தலையைச் சுட்டிக் காட்டினார். வடமொழி ஆசிரியருக்குத் தான் திலகரிடம் மிக வெறுப்பு இருந்தது. அவர் புதியதாக ஒரு கவியைக் கற்பிக்கத் தொடங்கிய வுடன் திலகர் 'இதுதானே? எனக்குத் தெரியுமே' என்பார். அதைப் பிழையில்லாமல் சொல்லிப் பொருளும் கூறுவார். சில சமயங்களில் ஆசிரியர் கூறும் பொருளைக் காட்டிலும் சிறந்த பொருளைத் திலகர் கூறுவார், என்ன ஆச்சரியம்! இதைத் தான் அந்த ஆசிரியர் விரும்பவில்லை!

இளமையிலேயே திலகர் கட்டுப்பாடுகளை விரும்புவதில்லை. அவர் தம்மிஷ்டப்படியே நடக்க விரும்புவார். 'பிறர் செய்வது போல் நான் ஏன் செய்ய வேண்டும்? எனக்கு அறிவில்லையா? என் இஷ்டப்படி நான் ஏன் காரியங்களைச் செய்யக் கூடாது?" என்பார். பரீட்சையில் அவர் கடுமை யான வினாக்களுக்கு மட்டும் விடைகளை எழுதுவார். ஆசிரியரிடம் அதற்கு அவர் கூறிய சமாதானம்



பால கங்காதர திலகர்

என்ன தெரியுமா? 'கடுமையான வினாக்களுக்கே விடை எழுதத் தெரிந்த ஒரு மாணவனுக்கு எளிய வினாக்களுக்கு விடை எழுதத் தெரியாதா? இதை ஆசிரியர்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? சாதாரண வினாக்களுக்கு விடை எழுதும்படி என்னை ஏன் கட்டாயப்படுத்துகிறீர்கள்?' என்பதே. ஆசிரியர் பாடம் நடத்தும்பொழுது ஏனைய பிள்ளைகள் விரைவாகக் குறிப்புகள் எழுதிக் கொள்வார்கள். திலகரிடம் அவ்வழக்கம் கிடையாது. இத்தகைய குணங்கள் திலகரிடம் இளமையில் அமைந்திருந்த காரணத்தால் அவரைச் சில ஆசிரியர்கள் வெறுத்தனர். இந்த நிலையில் அவருக்குத் திருமணம் நடந்தது. அவருக்கு மனைவியாக வாய்த்தவர் தபி பாய் என்னும் அழகு வாய்ந்த அம்மையார் ஆவார். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவரிடம் அன்பும், அருளும் குடிகொண்டிருந்தன. இத்தகைய பெண் தமக்கு மனைவியாகக் கிடைத்தது கண்டு அவர் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

திலகருக்குத் திருமணம் முடிந்த சின்னாட்களில் அவரது தந்தையார் இறந்தார். அவரது பத்தாவது ஆண்டிலேயே தாயும் இறந்து விட்டாராதலால் திலகர் அவருடைய இளைய தந்தையின் ஆதரவில் இருந்தார். அவருடைய ஆதரவால்தான் திலகர் கல்லூரிக் கல்வியை முடிக்க முடிந்தது. திலகர் 1872-ஆம் ஆண்டு மெட்ரிக்குலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். பிறகு அவர் தக்காணக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கிருந்த ஆசிரியர்கள் அவரது வடமொழி அறிவைக் கண்டு வியந்தனர். அவர் பி. ஏ. பட்டமும் பெற்றார்.

திலகரது மனம் சட்டக் கல்வி கற்பதிலேயே சென்றது. அவர் இந்து சட்டங்களை எல்லாம் நன்கு கற்றார். அதற்கு அவரது வடமொழியறிவு பேருதவி செய்தது. திலகர் இந்து மத உண்மைகளையும், இந்தியர்களின் பழங்காலப் பண்பாடுகளையும் நன்கு கற்றார். தாம் பிற்காலத்தில் ஒரு தலைசிறந்த வழக்கறிஞராக வரவேண்டும் என்பது அவரது பெரு விருப்பம். உலகத்தில் தம் புகழை நிலை நாட்டுவதே சிறந்தது என்று அவர் கருதினார். வழக்கறிஞர் தொழிலின் வாயிலாகப் பெரும் பொருள் சேர்க்கவேண்டும் என்றும் அவர் சில சமயங்களில் நினைத்ததுண்டு. இச்சமயத்தில் அவர் சட்டத் தேர்விலும் வெற்றி பெற்றார். ஆனால் அவர் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளவில்லை. என்ன ஆச்சரியம்! அவர் மக்களுக்குத் தொண்டு புரிவதில் முனைந்தார். அஃது இந்தியர்களின் தவப்பயனால் தான் என்று சொல்லவேண்டும்.

2. நாட்டுப்பணிகள்

இந்திய மக்களுக்குக் கல்வி கற்க வசதிகள் இல்லை. நகரங்களிலேயே நல்ல பள்ளிக்கூடங்கள் இல்லை. கிராமப் பள்ளிக்கூடங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டுவதில்லை. சில கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் பெயரளவில் இருந்தன. அவை ஒழுங்காக நடத்தப்படவில்லை. மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருவதே கடினம். இந்த நிலையில் கிராமக் கல்வி எவ்வாறு பரவும்? நகரங்களில் இருந்த பள்ளிக்கூடங்களிலும் பழைய முறைகளிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. இந்தியா

முன்னேற வேண்டுமானால் இந்திய மக்கள் சிறந்த கல்வியைப் பெறவேண்டும். இளைஞர்கள் தம் வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வியைக் கற்கவேண்டும். இளைஞர்களுக்கு நாட்டுப் பற்று, மதப்பற்று, மொழிப் பற்று முதலியன உண்டாக வேண்டும். இவை யாவும் திலகரது மனத்தில் தோன்றின. எனவே இந்தியாவில் சிறந்த பள்ளிக்கூடங்களை எவ்வாறு அமைப்பது என்று திலகர் கருதினார். அதற்குப் பலரது முயற்சி வேண்டும். திலகர் தாமே அதற்கு வழிகாட்டியாக இருக்க முடிவு செய்தார். இளைஞர் கட்குப் பல நல்லொழுக்கங்களைப் பள்ளிக்கூடத்தில் கற்பிக்க விரும்பினார். மாணவர்கள் தம் நலம் கருதாது பிறர் பொருட்டு உழைக்கக் கற்பிப்பது தமது கடமை என்று அவர் நினைத்தார்.

திலகரது கருத்தை அவரது நண்பராகிய அகார்க்கர் மிகவும் பாராட்டினார். திலகருடன் ஒத்துழைக்கவும் அவர் முன் வந்தார், இவ்விருவரும் செய்த முயற்சிக்கு விஷ்ணு சாஸ்திரி சிப்ளுங்கர் என்பவரும் உதவ ஒப்புக்கொண்டார், எனவே இவர்களின் முயற்சியால் 'புதிய ஆங்கிலக் கல்விச்சாலை' என்ற பெயருடன் ஒரு கல்விச்சாலை தொடங்கப்பட்டது. அம் மூவரும் வேறு சில நண்பர்களும் அக் கல்விச் சாலையில் ஆசிரியர்களாயிருந்தனர். அவர்களுள் திலகருக்கே பல பொறுப்புக்களும், வேலைகளும் இருந்தன. அக்கல்விச்சாலையில் கணக்கற்ற மாணவர்கள் சேர்ந்தனர். அங்குக் கற்பிக்கப்பட்ட கல்வியை எல்லோரும் புகழ்ந்தனர். ஆசிரியர்கள் தம் வேலையின் பொருட்டு எவ்விதமான ஊதியத்தை

மராத்திய நாடு முழுவதும் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும் என்பது திலகரின் கருத்து. எனவே அவரும், அவரது நண்பர்களும் தக்காணக் கல்விச் சங்கத்தைத் தொடங்கினர். அதன் ஆதரவில் திலகர் கல்வியை எங்கும் பரப்ப முயன்றார். தம்முடைய முயற்சிக்கு உதவி செய்கின்றவர்களிடம் தியாக புத்தியும், தன்னலமின்மையும் இருக்க வேண்டும் என்று திலகர் வற்புறுத்தினார். ஆசிரியர்கள் வேறு வேலைகளை மேற்கொள்ளக் கூடாதென்றும் திலகர் கட்டாயப்படுத்தினார். இதனைச் சிலர் விரும்பவில்லை. தக்காணக் கல்விச் சங்கத்தை நிர்வாகம் செய்தவர்களிடையே பல வாதங்கள் நிகழ்ந்தன. திலகர் கூறுகின்றபடி நடப்பதற்குப் பலர் மறுத்தனர். எனவே திலகர் அக் கல்விச் சங்கத்தை விடுத்து விலகி விட்டார். ஆனால் அவர் கேசரியின் வாயிலாக மக்களுக்குத் தொண்டு செய்வதை நிறுத்தவில்லை.

திலகரின் நாட்டுத் தொண்டு வெளிப்படுதற்கேற்ற ஒரு சந்தர்ப்பம் வந்தது. அக்காலத்தில் கிராபோர்டு என்னும் அரசாங்க அதிகாரியொருவர் அரசாங்க வரிகளை வசூல்செய்து வந்தார். அவர் லஞ்சம் வாங்கி வந்தார் என்று நாட்டு மக்களிடையே ஒரு எண்ணம் பரவியிருந்தது. அஃது உண்மைதானா என்று கண்டுபிடிக்க அரசாங்கம் விரும்பியது. அதைப்பற்றிய உண்மைகளை அறிந்தவர்கள் அவற்றை வெளியிட அஞ்சினர். அவற்றைத் தம் பத்திரிகையின் வாயிலாக வெளிப்படுத்தும்படி திலகர் பொதுமக்களை வேண்டிக் கொண்டார். ஆயின் சிலரே அவற்றைப் பற்றிய சில

உண்மைகளைக் கேசரியில் எழுதினர். பல உண்மைகள் வெளிப்படவே இல்லை. எனவே கிராபோர்டு குற்றமற்றவர் என்று அரசாங்கம் கருதியது; அவரைப்பற்றிக் குறைகூறியவர்களின் பேல் குற்றமும் சாட்டியது. இவ்வாறு பொதுமக்களில் சிலர் மீது குற்றம் சாட்டப்பட்டது தகாது என்று திலகர் கேசரியில் கட்டுரை எழுதினுர். அக்கட்டுரை மக்களின் உணர்ச்சியைத் தூண்டியது. மக்கள் திலகரிடம் பெருமதிப்பு வைத்தனர். திலகரின் புகழ் நன்கு பரவியது. அவர் 1895-ஆம் ஆண்டில் பம்பாய்ச் சட்டசபையிலும் அங்கத்தினர் ஆனுர்.

அரசியல் தொண்டில் திலகர் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருந்தார்; இந்திய தேசிய காங்கிரஸின் உறுப்பினராகவும் இருந்தார். ஆனுல் அப்பொழுது மராத்திய நாட்டுத் தொண்டர்களிடையே இரு பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவின் தலைவர் திலகர். மற்ருெரு பிரிவின் தலைவர் கோபால கிருஷ்ண கோகலே என்பவராவார். இவ்விருவரும் அறிவு மிக்கவர்கள்; மராத்தியர்கள்; தேசத் தொண்டர்கள்; தியாகிகள்; ஆனுல் கோகலே அரசாங்கத்துடன் ஒத்துழைத்து மக்களுக்கு நன்மைகளை உண்டாக்க நினைத்தார். திலகர் அந்நியர் ஆட்சியை வெறுத்தார். கோகலே சட்டசபைகளில் கலந்து கொண்டு நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்ய விரும்பினுர். திலகர் கிராம மக்களுடன் கலந்திருந்து எளியவர்களை முன்னேற்ற விரும்பினுர், கோகலே ஆங்கில மொழியை ஆதரித்தார். திலகர் மராத்திய மொழியை ஆதரித்தார். கோகலே சுய ஆட்சி கிடைக்க வேண்டும் என்று உழைத்தார். திலகரோ

பூரண சுயராஜ்யம் வேண்டும் என்று அல்லும் பகலும் பாடுபட்டார். இவ்வாறாக இந்த இரண்டு பெரியார்களுக்கிடையே பல அடிப்படையான கருத்து வேறுபாடுகள் இருந்தன. இவற்றால் காங்கிரஸ் கூட்டங்களில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. ஆனால் திலகரது நாட்டுப் பற்றினை அவரது எதிர்க் கட்சிக்காரர்களும் புகழ்ந்தனர்.

மராத்தியர்களுக்கு நாட்டுப் பற்றை மிகுதியாக ஊட்ட வேண்டும் என்பதற்காகவே திலகர் பெரும் பாடுபட்டார். மராத்திய வீர சிங்கமாகிய சிவாஜியைப்பற்றி மராத்திய மக்களும் ஏனையோரும் நன்கு அறியும்படி செய்ய வேண்டும் என்பது அவரது ஆவல். எனவே அவர் சிவாஜியின் நினைவிற்கு அறிகுறியாகத் திருவிழாக் கொண்டாட வேண்டும் என்று கூறினார், மக்கள் அதனை மனமகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆகவே அத்திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வந்தது.

ஒரு முறை அத்திருவிழா நடைபெற்ற சிறப்பைப்பற்றித் திலகர் தம் கேசரியில் விரிவாக எழுதியிருந்தார். அக்கட்டுரையில் வீரவுணர்ச்சி மிகுதியாக அமைந்திருந்தது. அக்கட்டுரை வெளிப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு பூனாவில் இரண்டு ஆங்கிலர் கொலை செய்யப்பட்டனர். திலகரது கட்டுரையே அக் கொலைக்குக் காரணம் என்று அரசாங்கம் கருதியது ; வழக்கும் தொடுத்தது. திலகர் பதினெட்டு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார். அது பெரிய அநீதி என்று மக்கள் யாவரும் கூறினர். என் செய்வது ? திலகர் சிறையில் அடைந்த துன்பங்களுக்கு அளவில்லை. எனினும் திலகர்

சிறையில் தம் காலத்தை வீணுகக் கழிக்கவில்லை. புத்தகம் எழுதுவதிலேயே அங்கு அவர் தம் காலத்தைக் கழித்தார். ஓராண்டில் அவர் விடுதலை பெற்ருர். ஆயினும் அவரது உடல் நலம் சிறை வாழ்க்கையால் குன்றிவிட்டது.

சிறையிலிருந்து வெளிப்பட்டவுடன் திலகர் சிறிது ஓய்வு பெற்ருர்; உடல் நிலை குணமடைந்தது; மறுபடியும் தேசத் தொண்டில் ஈடுபட்டார். கேசரியில் எழுதுவதும், வீரச் சொற்பொழிவு நிகழ்த்துவதும் அவரது வேலைகளாக இருந்தன. அச் சமயத்தில் நாட்டில் பல இடங்களில் கலகங்கள் தோன்றின. அரசாங்கத்திற்கு எதிராகப் பலர் கிளம்பினர். அப்பொழுது திலகர் தம் கேசரியில் 'அரசாங்கத்திற்கு எதிராகக் குழப்பங்களும் கலகங்களும் தோன்றியுள்ளன. இவற்றை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பது வீணுகும். கலகங்கள் அடங்குவதற்கு ஒரு வழிதான் உண்டு. இந்தியர்களுக்கு 'சுயராஜ்யம்' கொடுப்பதுதான் அந்த வழி' என்று எழுதினுர். இவ்வாறு திலகர் எழுதியதற்காக அவர் சிறைப்படுத்தப்பட்டார். திலகர் சட்ட நிபுணரல்லரோ? அவரே தம் வழக்கில் வாதம் செய்தார். செய்தும் பயனென்ன? திலகருக்குத் தண்டனையே கிடைத்தது. அவர் நாடு கடத்தப்பட்டார். ஆறு ஆண்டுகள் திலகர் பர்மாவில் மாண்டலே நகரில் காவலில் இருந்தார்.

1914–ஆம் ஆண்டு திலகர் விடுதலை பெற்று இந்தியாவிற்கு வந்தார். மறுபடியும் கேசரி, மராத்தா என்னும் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினுர்; காங்கிரஸ் ஊழியர்களுடன்

ஒத்துழைக்க ஒப்புக் கொண்டார்; அப்பொழுது நடந்து வந்த அகில இந்திய சுய ஆட்சிச் சங்க இயக்கத்தில் சேர்ந்தார். அவர் 1916-ஆம் ஆண்டில் லக்னோவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாட்டிலும் கலந்துகொண்டார்; டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மையாருடன் ஒத்துழைத்தார். திலகர் தமது நண்பர்களுடன் பங்களூர், சென்னை, தஞ்சை, மதுரை முதலிய இடங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்; வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற பெரியார்களின் நட்பு அவருக்குக் கிடைத்தது. இந்தியர்களுக்குச் சுய ஆட்சி கிடைக்கும் பொருட்டு வாதம் செய்ய அவர் இங்கிலாந்திற்கும் சென்றார்; மேனாட்டிலிருந்து திரும்பிய ஓராண்டில் அவரது உடல் நலம் கெட்டுவிட்டது. திலகர் தமது அறுபத்தைந்தாவது வயதில் 1920-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-வது நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். எண்ணிறந்த மக்கள் அவரது ஈமச் சடங்கு நடந்தபொழுது கூடினர். அவரது உடலை சுடுகாட்டிற்குச் சுமந்து சென்றவர்களுள் மகாத்மா காந்தியடிகளும் ஒருவர். திலகர் இறந்தால் என்ன? அவரது உடல்தானே அழிந்தது? அவர் வளர்த்த உணர்ச்சி நன்கு தளிர்த்தது. அந்த உணர்ச்சியின் பயனாகத்தான் நாம் இப்பொழுது சுதந்திரம் அடைந்துள்ளோம்.

3. அருங்குணங்கள்

திலகர் செய்த அரும் பெரும் பணிகளைப் பார்த்தோம். அவர் தாம் இறக்கும் வரையில் மக்களுக்குப் பல தொண்டுகளைச் செய்தார்; அரசியலிலும் சமூ

கத்திலும் சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் செய்த சமூகச் சீர்திருத்தங்களுக்கு அளவில்லை. மக்களுக்குக் கல்வியறிவைப் புகட்ட அவர் செய்த முயற்சிகளை முன்பு குறிப்பிட்டுள்ளோம். மக்களுக்கு நாட்டுப்பற்றினை மிகுதியாக ஊட்டும் பொருட்டு அவர் செய்த முயற்சிகளையும் அறிந்தோம். அவர் உள்ளம் கலங்குவதும் அஞ்சுவதும் இல்லை; தளராத ஊக்கம் உள்ளவர்; சொல்வன்மையும் எழுத்து வன்மையும் வாய்ந்தவர்.

இளமையிலேயே திலகரிடம் சுதந்திர உணர்ச்சி இருந்தது. அது பிற்காலத்தில் நன்கு ஒளியுடன் விளங்கியது. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. நான் அதை அடைந்தே தீர்வேன்' என்று அவர் உறுதி பூண்டார். அது மட்டுமோ? அத்தகைய உறுதியை மக்களில் பலர் கொள்ளுமாறும் அவர் செய்தார். அவர் பின்பற்றிய முறைகளைச் சிலர் எதிர்த்தது உண்மையே. எனினும் அவருடைய நோக்கத்தை யாவரும் புகழ்ந்தனர். அவருடைய தியாகத்தை எல்லோரும் பாராட்டினர்.

திலகர் கடவுட் பக்தி மிகுதியாக வாய்ந்தவர். குற்றவாளி என்று கூறி நாடு கடத்தப்பட்ட பொழுது திலகர், 'என்னைக் குற்றவாளி என்று நீதி மன்றத்தினர் கருதுகின்றனர். நான் ஒரு குற்றமும் செய்யாதவன். எனது உடலைத்தான் சிறைப் படுத்த முடியும். என் உள்ளத்தையும் சிறைப்படுத்த முடியுமோ? எல்லாவற்றைக் காட்டிலும் மேலான ஒரு சக்தி உண்டு. நான் துன்பமடைய வேண்டு மென்பது கடவுளின் கருத்துப்போலும்! நான் துன்

பத்தை அடைய அடைய எனது மனம் திண்மையை அடையும்' என்று கூறினர்.

திலகர் சிவாஜியின் திருவிழா நடத்தியதைப் பற்றி முன்பு குறிப்பிட்டோம். கணேசர் விழாவைச் சீரிய முறையில் கொண்டாடுமாறு அவர் மக்களுக்குக் கூறினர். செல்வர்களே பெரும்பாலும் அவ்விழாவை முன்பு கொண்டாடி வந்தனர். பொது மக்கள் யாவரும் அவ்விழாவைக் கொண்டாடுமாறு திலகர் செய்தார்; அவ்விழாவைக் கொண்டாடும் முறைகளைப் பற்றித் தம் பத்திரிகையிலும் விரிவாக எழுதினர்.

இந்து மதத்தில் திலகர் ஆழ்ந்த பற்றுள்ளவர். வடமொழிப் பேரறிஞராகிய திலகர் வேதங்களை நன்கு கற்ருர், பகவத்கீதையைப் படித்துணர்ந்தார்; 'கீதா ரகசியம்' என்ற புத்தகத்தை எழுதினர். அவர் சிறையில் இருந்தபொழுதெல்லாம் பகவத் கீதை போன்ற நூல்களைப் படிப்பதிலேயே தம் காலத்தைக் கடத்தினர்.

திலகர் வாதங்களில் வல்லவர். எதிரிகளிடம் கடுமொழி பகர்வார். ஆனல், எளியவர்களிடம் இன்மொழி கூறுவார். அவர்களைக் கண்டால் திலகரின் மனம் உருகும். திலகர் இல்லறம் நடத்துங்கால் அவர்கள் வாழ்ந்த ஊரில் திருடர்கள் பயம் உண்டு. ஆதலால் பெண்டிர் தம் நகைகளை அரிசிப் பானைகளில் ஒளித்து வைப்பது வழக்கம். ஒரு நாள் திலகரின் மனைவி பிச்சைக்காரனுக்கு பிச்சையிட்டார். அந்த அரிசியில் ஒரு சிறு ஆபரணம் மறைந்திருந்தது. பிச்சையிட்ட பிறகுதான் அது அவ்வம்மையாருக்குத் தெரிய வந்தது. உடனே

அவர் அதை எடுத்துக் கொடுக்குமாறு பிச்சைக் காரனைக் கேட்டார். அப்பொழுது திலகர் அங்கு வந்து 'நன்றாயிருக்கிறது! அந்த ஆபரணம் தருமத்தில் சேர்ந்து விட்டது. அதைத் திரும்பக் கேட்பது தவறு' என்றார்.

திலகர் இளமையில், இளைத்த உடம்புடன், பலமின்றி இருந்தார். எனவே அவர் தமது உடம்பை வலுப்படுத்த எண்ணினார்; அதன் பொருட்டுப் பல தேகப் பயிற்சிகளை இடைவிடாது செய்தார். ஓடுவதும், நீந்துவதும், படகு ஓட்டுவதும் அவருடைய தேகப் பயிற்சிகளாக இருந்தன. நாட்டிற்கு உழைக்க நல்லுடல் வேண்டும் என்பது அவரது கருத்து. அவ்வாறு செய்த தேகப் பயிற்சியால் அவரது உடல் பிறகு வலிமையை அடைந்தது. அதனாலேயே அவர் பிற்காலத்தில் இடைவிடாது உழைக்க முடிந்தது.

மராத்திய நாட்டில் பெரும் பஞ்சம் உண்டான பொழுதும், பிளேக் என்னும் நோய் தோன்றிய பொழுதும் திலகர் ஏழை மக்களுக்குச் செய்த உதவிகள் கணக்கில் அடங்கா. அவர் எளியவர்களின் பொருட்டு அரசாங்கத்துடன் வாதம் செய்தார். பஞ்ச காலத்தில் மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்களை விற்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தினார். பிளேக் பரவிய காலத்தில் அவரே ஒரு மருத்துவச் சாலையை ஏற்படுத்தினார்; நோயாளிகளின் அருகில் நின்று வேண்டுவன செய்தார்.

திலகர் எப்பொழுதும் தம் இஷ்டப்படியே நடக்க விரும்புவார். ஆராய்ந்து பார்த்தே அவர் ஒரு காரி

யத்தை மேற்கொள்வார். அவரது முறைகளைச் சிலர் விரும்பவில்லை. அவருக்கு எதிரான கொள்கையினர் பலர் இருந்தனர். ஆனால் அவர்களிடமுள்ள நற்குணங்களைத் திலகர் புகழாமல் இருப்பதில்லை. உதாரணமாகத் திலகரும் கோகலேயும் தம்முட் பகைகொண்டிருந்தனர் என்று முன்னரே குறிப்பிட்டோம். கோகலே இறந்தபொழுது திலகர் மகிழ்ந்தாரோ? அன்று அன்று. எல்லோரைக் காட்டிலும் திலகரே பெரிதும் வருந்தினார். கோகலேயின் பூதவுடலின் அருகில் நின்று திலகர், 'நாம் ஒரு சிறந்த தேசத் தொண்டரை இன்று இழந்தோம். அவரைப் போல் நாமும் வாழ முயலவேண்டும். கோகலே தம் கடமைகளை நன்கு செய்தார். அவரது நோக்கத்தை நாம் பின்பற்றினால் நன்மையை அடைவது திண்ணம்' என்பன போன்ற கருத்துக்கள் அமைந்த பெருஞ் சொற்பொழிவை நிகழ்த்தினார். இச்செய்தியிலிருந்து பகைவரிடமுள்ள நற்பண்புகளைப் பாராட்டும் தன்மை திலகரிடம் அமைந்திருந்தது என்பதை நாம் நன்கு அறியலாம்.

திலகர் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்; பாடுபட்டார்; தமது இன்பங்கள் பலவற்றை விடுத்தார்; பிறர் பொருட்டு வாழ்ந்தார்; மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டினார்; கல்விச்சாலையை நிறுவினார்; கடவுட் பக்தியைப் பரப்பினார்; சட்ட அறிவும், நுண்ணறிவும் பெற்று விளங்கினார்; தமது பெயர் இந்தியாவில் என்றும் நிலைநிற்கும்படியாகச் செய்தார். அத்தகைய பெரியாருக்கு நாட்டு மக்கள் பொருத்தமான சிறப்புப் பெயரை அளித்தனர். 'லோகமான்யர்' என்பதே அப்பெயராகும். அப்

பெரியாரின் வாழ்க்கை நமக்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. அவரது பெருங் குணங்கள் பலவற்றை நாம் கைக்கொண்டால் நமக்குப் பெரும் பயன் உண்டாகும்.

பயிற்சி

1. திலகருக்கு வடமொழியறிவு மிகுதியாக ஏற்பட்டது எவ்வாறு?

2. திலகரை ஆசிரியர்கள் ஏன் வெறுத்தனர்?

3. திலகர் தொடங்கிய பள்ளிக்கூடம் எது? அஃது இப்பொழுது எவ்வாறு விளங்குகிறது?

4. திலகர் முதல் முறை சிறை செல்ல நேரிட்ட காரணம் யாது?

5. திலகர் நடத்தி வந்த இரண்டு பத்திரிகைகள் யாவை? அவற்றைப்பற்றிச் சிறு குறிப்புக்கள் வரைக.

6. சிவாஜி விழா, கணேசர் விழா ஆகிய இரண்டைப் பற்றியும் சிறு குறிப்புக்கள் எழுதுக.

7. திலகருக்கும், கோகலேக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளில் மூன்றினைக் குறிப்பிடுக.

8. 'திலகர் எளியவர்கட்கு இரங்கும் இயல்புடையவர்'—இதற்கு ஒரு உதாரணம் காட்டுக.

IV. வ. உ. சிதம்பரம் பிள்ளை

1. கல்வியும் தொழிலும்

நாம் இதுவரை வட நாட்டுத் தலைவர்களில் மூவரைப் பற்றி அறிந்தோம். இனி, தமிழ் நாட்டில் பிறந்த தனித் தலைவராகிய வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றினை அறிவோம். தமிழ் நாட்டவர்கள் சங்க கால முதலே வீரத்தில் சிறந்து விளங்கினர். தமிழர்களிடம் வீரவுணர்ச்சியும், தன்னலங் கருதாத தகைமையும், நாட்டுப் பற்றும் மிக்கிருந்தன; இன்றும் இருக்கின்றன. மராத்திய மக்களைத் திலகர் பெருமான் தட்டி எழுப்பிய காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ் மக்களை வ. உ. சிதம்பரம் பிள்ளை தட்டி எழுப்பினார். நமது பிள்ளையவர்கள் திலகரின் உயிர் நண்பர். வட நாட்டுத் தலைவர்கள் யாவரும் தமிழ் நாட்டின் தனிப் பெருந் தலைவராக விளங்கிய சிதம்பரம் பிள்ளையைப் பெரிதும் போற்றி மதிப்புத் தந்தனர்.

செந்தமிழை வளர்த்த பெருமை பாண்டி நாட்டிற்குரியது. பாண்டி நாட்டிற்கு அழகு தருவது திருநெல்வேலிச் சீமை ஆகும். அச்சீமையில் பாஞ்சாலங்குறிச்சி என்று ஒரு ஜமீன் இருந்தது. அதன் அருகில் அழகுடன் விளங்கும் சிற்றூர் ஒட்டப்பிடாரம் எனப்படும். அச்சிற்றூரில் வாழ்ந்த திருவாளர் உலகநாத பிள்ளையவர்களுக்கும், திருமதி பரமாயி அம்மையாரவர்களுக்கும் அருமந்த மைந்தராய் வ. உ. சிதம்பரம் பிள்ளை இம்மண்ணுலகில்



வ. உ. சிதம்பரம் பிள்ளை

தோன்றினர். அவர் தோன்றியது 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாவது நாளிலாகும். செல்வராக விளங்கிய உலகநாத பிள்ளை தம் மைந்தரைச் செல்வமாகவே வளர்த்தார்.

சிதம்பரம் பிள்ளை இளமையில் முதன் முதல் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். குப்பையில் கிடந்தாலும் குன்றிமணியின் ஒளி வீசுமன்றோ? திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே சிதம்பரம் பிள்ளையின் அறிவுத் திறன் நன்கு வெளிப்பட்டது. இளமையிலேயே அவரிடம் சுதந்திர உணர்ச்சி காணப்பட்டது; பிறர்க்கடிமை செய்வதை வெறுப்பார்; மாணவர்களை ஒன்று கூட்டுவார்; அவர்களுக்குத் தலைவராய் இருப்பார்; கற்பனைக் கதைகளைக் கூறுவார்; அஞ்சாமையை அவர்களுடைய மனத்தில் பதியச் செய்வார். மாணவர்கள் அவரைப் போற்றினர்; புகழ்ந்தனர்; அவர் சொற்படி நடக்கக் காத்திருந்தனர்.

அவர் செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் படித்து மெட்ரிக்குலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். பிறகு அவர் வழக்கறிஞர் தேர்விலும் தேர்ச்சி பெற்றார். இளமை முதலே சுதந்திர உணர்ச்சி மிக்க பிள்ளையவர்கள் ஒருவரிடம் கைகட்டி வேலை பார்ப்பதை விரும்பவில்லை. யாருக்கும் வழக்கறிஞர்கள் கீழ்ப்படிய வேண்டுவதில்லை அல்லவா? அது காரணமாகத்தான் சிதம்பரம் பிள்ளையின் மனம் வழக்கறிஞர் தொழிலை விரும்பியது. அவரது தந்தையாரும் அந்தத் தொழிலைச் செய்து வந்தார்.

எனவே சிதம்பரம் பிள்ளை எளிதில் வழக்கறிஞராகத் தொழில் செய்ய முடிந்தது.

சிதம்பரம் பிள்ளை சிறந்த வழக்கறிஞராக விளங்கினார். வாதாடும் திறமையை இளமையிலேயே பெற்றிருந்த அவர் பிற்காலத்தில் வாதங்களைத் திறம்பட நடத்தியதில் வியப்பில்லை. அவர் உண்மை உள்ள பக்கத்திலேயே வழக்காடுவார்; பொருளைப் பொருட்படுத்துவதில்லை; ஏழைகளின் வழக்குகளுக்குப் பொருள் பெறுவது இல்லை: பொய்யை மெய்யென்று வாதாடமாட்டார்; மெய்யை மெய்யென்று நிரூபிக்கத் தம் திறமைகளை யெல்லாம் காட்டுவார்; பல சொல்லி என்? பிற வழக்கறிஞர்களும் சிதம்பரம் பிள்ளையைப் புகழ்ந்தனர். மக்களோ அவருக்குப் பெருமதிப்பு அளித்தனர்.

ஓட்டப்பிடாரத்திலேயே அவர் முதலில் தம் தொழிலைத் தொடங்கினார். பிறகு அவரது நண்பர்கள் அவரைத் தூத்துக்குடிக்கு வருமாறு வேண்டினர். எனவே அவர் தூத்துக்குடிக்கு சென்று வழக்கறிஞர் தொழிலைத் திறம்பட நடத்தினார். செல்வமும் வந்தது. சிலர் செல்வம் வந்துற்ற காலத்தில் தம்மையே மறப்பர்; சுற்றத்தினரையும், நண்பர்களையும் மறப்பர். அந்த இழி குணங்கள் சிதம்பரம் பிள்ளையினிடம் இல்லை. செல்வம் வர வர அவரிடம் அன்பும், அருளும் குடிகொள்ளலாயின. உண்மை பேசுவதையே அவர் விரதமாகக் கொண்டவர். ஆகவே அவர் எவ்வளவு பொருள் கிடைப்பதாக இருந்தாலும் பொய் வழக்குகளை நடத்த மறுத்து விடுவார். பொய் வழக்கினைத் தொடுத்தது போலீசாராக இருந்தாலும் அவர் சிறிதும் அஞ்சமாட்

டார்; குற்றமற்ற ஏழை எளியவர்களின் பக்கத்திலேயே நின்று வாதாடி வெற்றி பெறுவார்.

சிதம்பரம் பிள்ளையின் முதல் இல்லறத் துணைவியாராக வாய்ந்தவர் வள்ளியம்மை என்னும் மங்கை நல்லார் ஆவார். இல்வாழ்க்கை நடத்தும் பெண்டிர்க்கு இயல்பாக இருக்கவேண்டிய தன்மைகளையெல்லாம் அவர் ஒருங்கே பெற்றிருந்தார். அறவோர்க்கு அளித்தல், துறவோர்க்கு உதவுதல், விருந்தினரைப் போற்றுதல் முதலிய சிறந்த தன்மைகள் அவ்வம்மையாரிடம் நன்கு அமைந்திருந்தன. அத்தகைய அம்மையார் தமக்கு மனைவியாராக வாய்த்தது, சிதம்பரம் பிள்ளைக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. ஆயின் அம்மகிழ்ச்சி நீடித்து நிற்கவில்லை. காலன் என்னும் கொடியோன் அக்கற்புடை மனைவியின் உயிரைக் கவர்ந்து சென்று விட்டான். என் செய்வது? மனைவியை இழந்த சிதம்பரம் பிள்ளை அடைந்த வருத்தத்திற்கு எல்லை இல்லை. அவரது நண்பர்களும், உறவினர்களும் அவரை மறுமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினர். அதற்கு அவர் இசையும்படி நேரிட்டது. எனவே வள்ளியம்மையைப் போன்ற அறிவும், அடக்கமும், அன்பும், கற்பும் வாய்ந்த மீனாட்சி அம்மை என்னும் மெல்லியலார் சிதம்பரம் பிள்ளையின் இரண்டாவது மனைவி ஆனார்.

சிதம்பரம் பிள்ளை வழக்கறிஞர் தொழிலிலேயே எப்பொழுதும் ஈடுபட்டிருக்கவில்லை. சமயம் வாய்த்த பொழுதெல்லாம் தமிழ் நூல்களைப் படிப்பார்; தமிழ்ச் சுவையை நுகர்வார்; பிறர்க்கும் ஊட்டுவார்; மக்களுக்கு நல்லொழுக்கங்களைக் கற்

பிப்பார். "தமிழ் நாடு" என்னும் தினசரிப் பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதுவார். அவரே 'விவேகபானு' என்னும் மாதப் பத்திரிகையையும் நடத்தினார். அதற்கு அவரது நண்பராகிய சுவாமி வள்ளிநாயகர் என்பவருடைய உதவி கிடைத்தது. அப்பத்திரிகையின் வாயிலாகச் சிதம்பரம் பிள்ளை மக்களிடையே பலவிதச் சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றார். இந்நிலையில் நாட்டில் 'சுதேசி இயக்கம்' ஏற்பட்டது. அது முதல் சிதம்பரம் பிள்ளை நாட்டுத் தொண்டிலும், சமூகச் சீர்திருத்தத்திலும், ஏழைகட்கு உழைப்பதிலும் பெரிதும் சிந்தையைச் செலுத்தினார்.

2. நாட்டுப் பற்றும் சமூகத் தொண்டும்

1905-ஆம் ஆண்டு வங்காளம் பிரிக்கப்பட்டது. இதைப்பற்றிச் சித்த ரஞ்சன தாஸின் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளோம். அதுபொழுது வங்க மக்கள் கொதித்தெழும்பினர். பல விடங்களில் குழப்பங்களும், கலகங்களும் தோன்றின. ஆங்கிலர் நம் நாடு புகுந்தது எதன் பொருட்டு? வாணிகம் செய்து பொருளீட்ட அன்றோ? அவர்கள் பொருளையும் ஈட்டினர்; நாட்டையும் கைப்பற்றினர்; நம் நாட்டுச் செல்வத்தைக் கவர்ந்து சென்றனர்; பயனற்ற பொருள்களை நமக்களித்து விலை மிக்க பொன்னை கொண்டு சென்றனர்; அயல் நாட்டு உடைகளை நாம் கட்டுமாறு செய்தனர். இந்நிலையிலேயே வங்கப் பிரிவினை நிகழ்ந்தது. மக்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று உண்டாயிற்று. மக்கள் அயல் நாட்டுப் பொருள்களை வெறுக்கத் தொடங்கினர்.

இவ்வாறு வங்கத்தில் தோன்றிய உணர்ச்சி தமிழ் நாட்டிலும் பரவியது. அதற்குக் காரணமாக இருந்தவர் சிதம்பரம் பிள்ளையே என்று கூறவும் வேண்டுமோ?

திருநெல்வேலிச் சீமையில் 'சுதேசி இயக்கம்' வேர்விட்டெழுந்தது. தென் பாண்டி நாட்டு மக்கள் அயல் நாட்டு ஆடைகளையும், பொருள்களையும் எரித்தனர். எத்தகைய பொருளாக இருந்தாலும், எவ்வளவு இன்றியமையாததாக இருந்தாலும் மக்கள் அதனை வெறுத்தனர். சிதம்பரம் பிள்ளையின் வீட்டில் அயல்நாட்டு நாகரிகத்தின் அறிகுறி ஒன்றுமே இல்லை. நாட்டுத் தொழில்களை வளர்க்க வேண்டும் என்பது சிதம்பரம் பிள்ளையின் நினைவு. அதுபொழுது அவர் 'தூத்துக்குடியில் 'தரும சங்கம்' என்னும் நெசவுச்சாலை ஒன்றைத் தொடங்கினார். சுதேசிப் பண்டசாலை ஒன்றையும் அவர் ஏற்படுத்தினார். அன்றியும் அவர் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து சொற்பொழிவுகளை ஆற்றினார். அவரோ சிறந்த வழக்கறிஞர்; சொல் வன்மை வாய்ந்தவர்; தமிழறிவு மிக்கவர்; அஞ்சாமையைக் கொண்டவர்; நாட்டுப் பற்று மிக்கவர். அத்தகையார் உணர்ச்சி வாய்ந்த சொற்பொழிவுகளைச் செய்ததில் வியப்பென்ன இருக்கிறது? தமிழ் நாட்டில் நாட்டுப்பற்றினை நன்கு வளர்த்த பெருமையில் சிதம்பரம் பிள்ளைக்கும் பெரும் பங்கு உண்டு.

இச்சமயத்தில் தம் பெயர் என்றென்றும் அழியாதிருக்குமாறு செய்வதற்கேற்ற ஒரு வாய்ப்பு சிதம்பரம் பிள்ளைக்குக் கிடைத்தது. தூத்துக்குடிக்கும், சிங்களத் தீவில் உள்ள கொழும்புக்கும்

கப்பல் போக்கு வரவு நிகழ்ந்தது. அவ்வாறு கப்பலை ஓட்டியவர்கள் ஆங்கிலராவர். 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யினது கப்பல்களே அங்கு ஓடிக்கொண்டிருந்தன. செல்வத்தைச் சேர்ப்பதிலேயே நாட்டம் உடையவர்களாயிருந்த அந்தக் கம்பெனியார் நம் நாட்டு மக்களிடம் சிறிதும் அருள் காட்டவில்லை. அவர்களுக்குப் போட்டியும் இல்லாமல் இருந்தது. இதைக் கண்ட சிதம்பரம் பிள்ளை ஆழ்ந்து சிந்திக்கலானார்; ஆங்கிலேயருடன் போட்டியிட முடிவு செய்தார். அவருடன் தூத்துக்குடி வணிகர்கள் ஒத்துழைத்தனர்.

கம்பெனி நடத்துவதென்றால் பெரு முயற்சியும், பெரும் பொருளும் வேண்டுமன்றோ? எனவே சிதம்பரம் பிள்ளை கம்பெனிக்குப் பங்காளிகளைச் சேர்க்க முயன்றார்; அவர் தமிழ் நாட்டில் பல செல்வர்களிடம் சென்றார். பழந்தமிழ் நாட்டுப் பெருமைகளை எடுத்துரைத்தார்; சேரன்—செங்குட்டுவன், இராச ராச சோழன் முதலியவர்கள் கப்பற் படையைச் செவ்விய முறையில் அமைத்திருந்த செய்திகளைத் தமிழ்நாட்டுச் செல்வர்களுக்கு விளங்கக் கூறினார்; பழங்காலத்தில் அயலார் மரக்கலம் நிறையப் பொன்னைக் கொண்டு வந்து தமிழ் நாட்டிற் கொடுத்து, மிளகை வாங்கிச்சென்ற நிகழ்ச்சியைச் சிறப்பித்துச் செப்பினார். தமிழ்ச் செல்வர்கள் விருப்பத்துடன் கம்பெனி நடத்த உதவி செய்தனர். சிதம்பரம் பிள்ளை 1906-ஆம் ஆண்டில் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியை' நிறுவினார்; 'கப்பலோட்டிய தமிழர்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியாரும் போட்டி போடுவதில் தீரர்கள். அவர்கள் கப்பல் கட்டணத்தை மிகவும் குறைத்தனர்; இலவசமாக மக்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லவும் துணிந்தனர். வந்த நஷ்டத்தை அவர்கள் பொருட்படுத்தவில்லை. எவ்வாறேனும் சுதேசிக் கம்பெனியை ஒழித்துவிட முயன்றனர். சிதம்பரம் பிள்ளையைச் சுதேசிக் கம்பெனியிலிருந்து விலகுமாறு செய்யப் பலவாற்றானும் பாடுபட்டனர்; லட்சக்கணக்கான ரூபாய்கள் கொடுப்பதாக ஆசை வார்த்தை காட்டினர். சிதம்பரம் பிள்ளையோ அதற்கு உடன்படுபவர்? அந்நியரின் ஆசை வார்த்தைகளில் மயங்குவாரோ? சிதம்பரம் பிள்ளை அல்லும் பகலும் அக் கம்பெனியின் பொருட்டாகப் பாடுபட்டார். அவரது நன் முயற்சியால் அக் கப்பற் கம்பெனி இரண்டாண்டுகள் இனிது நடந்தது.

தூத்துக்குடியில் ஒரு பருத்தி ஆலை உள்ளது. அது 'கோரல் மில்ஸ்' என்று அழைக்கப்படும். அங்கு ஒரு முறை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர்கள் தமக்குக் கூலி அதிகமாக வேண்டும் என்று அதிகாரிகளைக் கேட்டனர். அதிகாரிகள் மறுத்தனர். அதன் பயனாகவே வேலை நிறுத்தம் தொடங்கியது. சிதம்பரம் பிள்ளை தொழிலாளர்கட்கும், ஆலை முதலாளிகட்கும் சமரசம் செய்து வைக்க முயன்றார். அவருடன் சுப்பிரமணிய சிவா என்னும் நண்பரும் ஒத்துழைத்தார். முதலாளிகள் எவ்விதமான சமரசத்திற்கும் வரவில்லை; சமரசம் செய்து வைக்க முயன்ற நண்பர்கள் இருவரிடமும் வெறுப்புக் கொண்டனர்; அவர்களுடைய

தூண்டுதலாலேயே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர் என்று அரசியலாரிடம் முறையிட்டனர். எனினும் அரசியலாரால் அதுபொழுது ஒன்றும் செய்ய முடியவில்லை. வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட ஏழைத் தொழிலாளர்கள் பசிப் பிணியால் துன்புற்றனர். சிதம்பரம் பிள்ளை ஊர் ஊராகச் சென்று பொருள் திரட்டி ஏழைத் தொழிலாளர்களின் பசிப்பிணியை அகற்றினர். இச் செய்கையால் அரசாங்கத்தார் சிதம்பரம் பிள்ளையின்மேல் வெறுப்புக் கொண்டனர்; அவரைத் தண்டிக்கச் சமயம் பார்த்திருந்தனர்.

இவ்வமயத்தில் வீரத் தியாகியான விபின சந்திர பாலர் சிறையிலிருந்து விடுதலை பெற்றார். தமிழ் நாட்டினர் அந்நாளைக் கொண்டாட முடிவு செய்தனர். சிதம்பரம் பிள்ளையும், அவரது நண்பர்களும் அக்கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாதென்று அரசாங்கம் தடை செய்தது. சிதம்பரம் பிள்ளையோ அதனைப் பொருட்படுத்தவில்லை; கொண்டாட்டத்தில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டார்; உணர்ச்சி வாய்ந்த சொற்பொழிவை ஆற்றினர். அவரது உயிர் நண்பராகிய சிவாவும் அக் கூட்டத்தில் பேசினர். எனவே அவ்விருவரும் அரசாங்கத்தால் சிறைசெய்யப்பட்டனர். பின்ஹே என்னும் துரை அவர்களுடைய வழக்கை விசாரித்தார். அரச நிந்தனைக் குற்றம் சிதம்பரம் பிள்ளையின்மீது சாட்டப்பட்டது. அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சிவாவிற்குப் பத்து ஆண்டு சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது. இச் செய்தியைக் கேட்ட இந்திய மந்திரியாகிய மார்லி பிரபுவே

வெறுப்புக் கொண்டார்; இத்தண்டனைகளைக் கண்டித்தார். தமிழ் நாட்டு மக்கள் பெரு வருத்தத்தை அடைந்தனர். பலரது முயற்சியால் முடிவில் சிதம்பரம் பிள்ளையின் ஆயுள் தண்டனை ஆறுண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப் பட்டது.

சிதம்பரம் பிள்ளை முதலில் கோயம்புத்தூர்ச் சிறையிலும், பின்பு கண்ணனூர்ச் சிறையிலும் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் சிறையில் மிகக் கடுமையாக நடத்தப்பட்டார். சிதம்பரம் பிள்ளை அங்குக் கல்லுடைந்துக் கை நொந்தார். செக்கிழுத்து உடல் சோர்ந்தார். அவரது உடல் சோர்ந்ததே ஒழிய உள்ளம் சோர்வடையவில்லை. "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற குறள் அடி அவரது நினைவிற்கு அடிக்கடி வரும். துன்பமின்றிச் சுதந்திரம் பெற முடியாது என்பது சிதம்பரம் பிள்ளையின் கருத்தாகும்.

சிறையில் இருந்த காலத்தில் சிதம்பரம் பிள்ளை தம் காலத்தை வீணாகக் கழிக்கவில்லை. சிறைச் சாலையில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று அவர் வாதாடினார். அதிகாரிகள் அதன்படி சீர்திருத்தங்கள் செய்ய நேரிட்டது. சிறையில் ஓய்வு நேரங்களில் சிதம்பரம் பிள்ளை நூல்களைப் படித்தார்; பல அரிய நூல்களை எழுதினார். அப்பொழுது அவர் எழுதிய நூல்களே "அகமே புறம்", "மனம் போல வாழ்வு", வலிமைக்கு மார்க்கம்", "மெய்யறிவு" என்பனவாகும். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு சிதம்பரம் பிள்ளை சென்னையில் மயிலாப்பூரிலும், பிரம்பூரிலும் காலம் கழித்தார்.

தமிழில் தொல்காப்பியம் என்பது சிறந்த பழைய இலக்கண நூலாகும். அதற்குப் பலர் உரை எழுதி உள்ளனர். அவ்வுரைகளில் ஒன்றாகிய இளம்பூரணர் உரையைச் சிதம்பரம் பிள்ளை அச்சிட்டுப் பதிப்பித்தார். பிறகு சிலகாலம் வழக்கறிஞர் தொழிலையும் செய்தார். அரசாங்கம் அவர் வழக்கறிஞர் தொழிலை நடத்துவதற்கு அனுமதி தர மறுத்தது. ஆயின் அதுபொழுது சென்னை நீதிபதியாக இருந்த வாலஸ் என்பவர் சிதம்பரம் பிள்ளைக்கு வழக்கறிஞர் சன்னத்து திரும்பக் கிடைக்கும்படி செய்தார். பின்பு பிள்ளையவர்கள் மேலும் சில தமிழ் நூல்களை அச்சிட்டார். அப்பொழுது தான் 'இன்னிலை' என்னும் கீழ்க் கணக்கு நூல் அச்சிடப்பட்டது. பிள்ளையவர்களுக்கு இறுதிக் காலமும் நெருங்கியது.

இவ்வாறு தேசத் தொண்டும், தமிழ்த் தொண்டும், சமூகத் தொண்டும் இடைவிடாது செய்து வந்த தியாகியை அவரது இறுதிக்காலத்தில் தமிழ் நாட்டார் ஆதரிக்கத் தவறினர். பிள்ளையவர்களுக்கு முதுமைப் பருவம் வந்தது; வறுமையும் வாட்டியது; உடல் தளர்ந்தது; உள்ளம் வாடியது; ஆயின் உறுதி தளரவில்லை. நாட்டுத் தொண்டு செய்ய உடல்நிலை இடம் தரவில்லையே என்பதுதான் அவருக்குப் பெருங் குறையாக இருந்தது. தாய் நாட்டு விடுதலையைக் காண அவர் உள்ளம் பெரிதும் விரும்பியது. இந்நிலையில் அவரது உடலில் நோய் முற்றியது. அவர் 1936-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமது 63-வது வயதில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார். தியாகிகள் மறைந்தால் என்ன?

அவர்கள் மூட்டிய உணர்ச்சித் தீ அணையுமோ? அவர்களுடைய புகழ் மறையுமோ? தமிழ் நாட்டுத் தொண்டர்களில் தலைசிறந்தவர் சிதம்பரம் பிள்ளையே என்று இன்று மக்கள் கூறுகின்றனர்.

3. நற்பண்புகள்

சிதம்பரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருங்க அறிந்தோம். அவரிடம் அன்பும் அருளும், தொண்டும், உழைப்பும், அறிவும், ஊக்கமும், வீரமும் ஒருங்கே அமைந்திருந்தன என்பதைக் கண்டோம். அவர் எக்காலத்திலும் யாருக்கு அஞ்சியும் தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டதே இல்லை. தன்னலங் கருதாது பிறர் நலங் கருதியே அவர் வாழ்ந்தார்; தமிழ்க் கல்வியைப் பரப்பினார்; தமிழ்ச் செய்யுட்களை இயற்றினார்; ஆங்கிலத்திலும், தமிழிலும் நேரிய புலமை வாய்ந்தவராக விளங்கினார்; கப்பலோட்டிக் காட்டினார்; தமிழ் நாட்டு மக்களுக்கு வீரவுணர்ச்சியையும் தியாக எண்ணத்தையும் ஊட்டினார்; தமிழ்நாட்டார்களுக்கே ஒரு வழிகாட்டியாக வாழ்ந்தார்.

பிள்ளையவர்கள் காங்கிரஸில் சேர்ந்து அரும் பெருந்தொண்டு செய்தார். அவர் ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்திற்குப் போவார். அக்காலத்தில் காங்கிரஸில் இரு பெரும் பிரிவுகள் இருந்தன என்பதைத் திலகர் பெருமானின் வரலாற்றில் கூறினோம். அமிதவாதிகளின் தலைவராகத் திலகர் விளங்கினார். சிதம்பரம் பிள்ளை திலகரைப் பின்பற்றினார்; அவரைத் தம் குருவாகவும் நினைத்திருந்தார். சிதம்பரம் பிள்ளை வறுமை

யால் துன்புற்றிருந்த காலத்தில் திலகர் அவருக்கு மாதம்தோறும் பொருள் அனுப்பி உதவி செய்து வந்தார். சிதம்பரம் பிள்ளை அரசாங்கத்தின் தடையை மீறிச் சொற்பொழிவாற்றிச் சிறை சென்ற செய்தியை முன்னரே அறிந்தோம். தமிழ் நாட்டில் தேசிய உணர்ச்சியை ஊட்டிய பெருமையில் பெரும் பங்கு சிதம்பரம் பிள்ளையையே சாரும்.

சிதம்பரம் பிள்ளை இளகிய மனம் படைத்தவர்; ஏழைகளின் தோழர்; சாதிப் பிணக்குகளை அறவே வெறுத்தவர். தூத்துக்குடியில் உள்ள பருத்தி ஆலையின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த பொழுது பிள்ளையவர்கள் அத் தொழிலாளர்கட்குச் செய்த உதவியை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அவரது நண்பர்களில் ஒருவர் சுவாமி சகஜானந்தம் என்பவராவார். அவர் முதன் முறை பிள்ளையவர்களைப் பார்த்தபொழுதே தாம் நந்தனார் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைக் கூறிவிட்டார். சிதம்பரம் பிள்ளை அவரைத் தமது உயிர் நண்பராகவே கருதிப் போற்றினார். நமது பெரியார் சாதிப் பிணக்குகளை மனத்தில் சிறிதும் கொள்ளவில்லை என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு சான்று வேண்டுமோ?

பிள்ளையவர்களிடம் அஞ்சாமைத் தன்மையும் விடாமுயற்சியும் சொல்வன்மையும் மிக்கிருந்தன. சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவுவதற்கு அவர் பட்டபாடுகளை இவ்வளவு என்று சொல்லமுடியாது. அவர் ஒரு முறை கப்பல் வாங்கும் பொருட்டுப் பம்பாய் சென்றார். செல்லும்பொழுது, "யான் கப்பலுடன் திரும்புவேன். கப்பல் வாங்க இயலவில்லையானால் கடலில் வீழ்ந்து இறப்பேன்" என்று வஞ்

சினம் கூறிச் சென்றார். அதுகாலையில் அவர் தம் குடும்பத்தினரைத் தனியே விடுத்துச் சென்றிருந்தார். அக்குடும்பத்திற்குப் பல துன்பங்கள் வந்தன. அவற்றைக் கடித வாயிலாக அறிந்தார் சிதம்பரம் பிள்ளை. உடனே ஓடி வந்துவிட்டாரோ? அன்று அன்று. எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பதன்றோ அவரது இயல்பு. அப்பொழுது அவர் தம் ஊரிலிருந்த நண்பர்கட்கு, 'என் மைந்தன் நோய் வாய்ப்பட்டுள்ளதையும், மனைவி கருவுயிர்க்கும் நிலையில் இருப்பதையும் யான் அறிவேன். அவர்களை யான் கடவுளிடம் ஒப்படைத்திருக்கிறேன். எது செய்வது நலம் என்பதைக் கடவுள் என்னைக் காட்டிலும் நன்றாக அறிவார். எனவே, எனக்குச் சிறிதும் கவலை உண்டாகவில்லை.' என்று எழுதினார். ஆகவே எடுத்த காரியத்தை இடைவிடாது செய்து முடிக்குந் தன்மை சிதம்பரம் பிள்ளையிடம் அமைந்திருந்தது என்பதை நாம் நன்குணரலாம்.

சிதம்பரம் பிள்ளை பிறர் செய்த நன்றியை எக்காலத்திலும் மறவார். நன்றி மறவாத நற்குணம் அவரிடம் நன்கு அமைந்திருந்தது. அவர் சுதேசிக் கப்பல் கம்பெனி நடத்தியகாலையில் ஆறுமுகம் பிள்ளை என்னும் நண்பர் அவருக்குப் பேருதவி புரிந்தார். எனவே அந் நண்பரது நினைவின் பொருட்டு அவருடைய பெயரைப் பிள்ளையவர்கள் தமது இரண்டாவது மைந்தருக்கு வைத்தார். அவர் சிறையில் இருந்த காலையிலும், பின்னரும் வேதியப் பிள்ளை என்பவர் அவருக்குப் பொருளுதவி செய்து வந்தார். அவர் செய்த நன்றியைத் தாம் எப்பொழுதும் நினைவுகூறும் பொருட்டுத்

தமது இரண்டாவது மகளுக்குப் பிள்ளையவர்கள் வேதவல்லி என்ற பெயரை வைத்தார். சி. கே. சுப்பிரமணிய முதலியார் என்னும் அறிஞர் தமக்குச் செய்த உதவிக்காகப் பிள்ளையவர்கள் அவரது பெயரைத் தமது மூன்றாவது மைந்தருக்கு வைத்தார். வழக்கறிஞர் தொழிலுக்கு சன்னத்துக் கொடுக்க அரசாங்கம் மறுத்த பொழுது, வாலஸ் என்னும் துரைமகனார் பெருமுயற்சி செய்து வழக்கறிஞர் தொழில் நடத்த அனுமதி வாங்கித் தந்தார். அவ்வன்பரின் நினைவுக்காக நமது பெரியார் தமது நான்காவது மைந்தருக்கு வாலீஸ்வரன் என்று பெயரை இட்டார். சிதம்பரம் பிள்ளையிடம் செய்ந்நன்றி மறவாச் செவ்விய தன்மை அமைந்திருந்தது என்பதற்கு இவற்றைக் காட்டிலும் வேறு சான்றுகளும் வேண்டுமோ ?

பிள்ளையவர்கள் தமிழ்மொழியினிடம் மாறாத அன்பு பூண்டவர். பழங்காலத் தமிழர்களின் வீரச் செய்கைகளை அவர் தமிழ்நாட்டு மக்களுக்குக் கூறி, அவர்களைத் தட்டி எழுப்பினார்; தமிழ் நாட்டு வேந்தர்கள் கப்பற்படை வைத்திருந்த செய்தியைத் தம் காலத்துச் செல்வர்கட்கு எடுத்துக் கூறினார். திருக்குறளிடம் அவருக்கு மாறாத அன்பு இருந்தது; தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தார். திருவாளர் செல்வகேசவராய முதலியார் போன்ற தமிழறிஞர்களைத் தம் உற்ற நண்பர்களாகக் கொண்டார். எனவே தமிழினிடம் அவர் கொண்டிருந்த பேரன்பினை நாம் நன்கு உணரலாம்.

மகாத்மா காந்தியடிகளுக்கும், சிதம்பரம் பிள்ளைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. சிதம்

பரம் பிள்ளை சிறையில் கிடந்த காலத்தில் மகாத்மா காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்தார். அவர் பிள்ளையவர்களின் குடும்பத்திற்காக நிதி திரட்டினுர். காந்தியடிகள், திலகர், லஜபதிராய், பாபு ராஜேந்திர பிரஸாத், ராஜாஜி முதலிய பெரியார்கள் பிள்ளையவர்களுக்குப் பெருமதிப்புக் கொடுத்துள்ளனர். 1935-ஆம் ஆண்டில் பாபு ராஜேந்திர பிரஸாத் தூத்துக்குடிக்குச் சென்றிருந்தபொழுது "சிதம்பரம் பிள்ளை வாழும் இந்நகருக்கு வரும்படியான பேறு எனக்குக் கிடைத்துள்ளது. தேசத் தொண்டராகிய சிதம்பரம் பிள்ளை சிறை செய்யப்பட்டதைப் பத்திரிகைகளில் படித்தேன். நாட்டுத் தொண்டினைச் செய்யுமாறு அந்நிகழ்ச்சி என்னைத் தூண்டியது" என்று கூறினுர். ராஜாஜி அவர்கள் சென்னையில் நிகழ்ந்த பொதுக் கூட்டமொன்றில் "தமிழ் நாட்டிலேயே சிதம்பரம் பிள்ளை ஒருவர் தான் வீரர் என்பது திலகரின் கருத்து" என்று கூறினுர். நமது தேசியக் கவியாகிய சுப்பிரமணிய பாரதியாரும் இவரைப் பலபடப் புகழ்ந்துள்ளார்.

இவ்வாறு நாட்டுத் தலைவர்கள் பலராலும் பாராட்டப்பெற்ற வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பிறந்த தமிழ் நாட்டில் நாம் பிறந்துள்ளோம் என்று எண்ணும்பொழுது நமக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகின்றது. நாட்டுத் தலைவர்கள் ஒரு பயன் கருதித் தொண்டு செய்யவில்லை. தமக்குப் பிறகாவது நாடு சுதந்திரம் அடையவேண்டும் என்று எண்ணியே அவர்கள் உழைத்தனர். அவர்கள் உழைப்பின் பயனை நாம் அடைந்துள்ளோம். ஆம். மரம் வைத்தவன் ஒருவனுயிருக்க அதன் பழத்தைத் தின்பவன்

வேறொருவன்தானே? நம் நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பின்பற்றி நம் வாழ்வை நாய் திருத்திக்கொள்ள வேண்டும். நாம் பெரும் பயன் அடைவதற்கு அதைக் காட்டிலும் வேறு சிறந்த வழி இல்லை.

"வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!"

பயிற்சி

1. சிதம்பரம் பிள்ளை கல்வி கற்ற வரலாற்றைச் சுருக்கி வரைக.

2. பிள்ளையவர்களின் முதல் மனைவியாரைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

3. 'கப்பலோட்டிய தமிழர்' என்று சிதம்பரம் பிள்ளையைக் குறிப்பிடுவது ஏன்? விளக்கி வரைக.

4. பிள்ளையவர்கள் சிறைப்பட்ட காரணம் யாது?

5. சிதம்பரம் பிள்ளை சிறையில் அடைந்த துன்பங்கள் யாவை?

6. பிள்ளையவர்கள் எழுதிய நூல்கள் யாவை?

7. பிள்ளையவர்களிடம் நன்றி மறவாத தன்மை இருந்தது என்பதை நாம் எவ்வாறு அறியலாம்?

8. சிதம்பரம் பிள்ளையின் நண்பர்களில் நால்வரைக் குறிப்பிடுக.

NATTU THALAIVAR NALVAR

BY

VIDWAN S. NAGARAJAN, B.O.L., B.T.
Tamil Pandit, St. Mary's Girls High School, Salem

THE ORIENTAL PUBLISHING HOUSE
EDUCATIONAL PUBLISHERS,
286, ESPLANADE (APPAH BUILDINGS) MADRAS 1.

 [Price As. 11